# தமிழ்நாடு ஓய்வூதியர் நண்பன்

## TAMILNADU OYUVOOTHIAR NANBAN TAMIL MONTHLY


| | | | | |
|---|---|---|---|---|
| VOLUME - 11 | மலர் : 11 | JULY- 2024 | Annual Subscription - Rs.200 | விலை : ரூ.15.00 |
| ISSUE NO - 10 | இதழ் : 10 | ஜுலை – 2024 | ஆண்டு சந்தா – ரூ.200 | Price : Rs.15.00 |


### தானைத் தலைவர் திரு.சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் நிகழ்வுகள்










### 18.07.2024 அன்று நடைபெற்ற விழாவில் கட்டிட நிதி நன்கொடை வழங்கியவர்கள்











மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திருமிகு. அர.சக்கரபாணி அவர்களை மரியாதை நிமித்தமாக ஒட்டன்சத்திரம் வட்டக் கிளை நிர்வாகிகள் மாநில துணை பொதுச்செயலாளர் திரு. J.K. தலைமையில் சந்தித்த நிகழ்வு





ஓய்வூதியர்கள் தந்தை அமரர் DS.நகரா அவர்களின் பிறந்த நாள் 29.07.2024 அன்று கொண்டாடப்பட்டது








சென்னை மாவட்டத்தின் சார்பில் 18. 07. 2024 அன்று நடைபெற்ற
தானைத் தலைவர் திரு சிவ. இளங்கோ அவர்களின் 88வது பிறந்த தின விழா நிகழ்வுகள்

# தமிழ்நாடு ஓய்வூதியர் நண்பன்

**தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம்**
(பதிவு எண் 84 / 2010)
தமிழ் மாத இதழ்
ஆசிரியர் :
**கோ. சீதாராமன்**
மாநிலத் தலைவர்

வெளியீடு
**சிவ. இளங்கோ இல்லம்**
அஞ்சல் முகவரி
எண்.7, நீலி வீராசாமி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை—600 005.

ஆசிரியர் குழு

**கோ. சீதாராமன்**
**சி.மருதை**
**அ.சந்திரபோஸ்**
**எஸ். காளிங்கராயன்**
**என். பக்தவத்சலம்**
**வை.ஆறுமுகம்**

புரவலர் (ஆயுள்) கட்டணம் ரூ. 1,500/—
மூன்றாண்டு சந்தா ரூ. 500 /—
ஆண்டு சந்தா — ரூ. 200/—
தனி இதழ் — ரூ. 15/—

அச்சிடுவோர்
ஸ்ரீ முருகன் பிரிண்டர்ஸ்,
நம்பர்—7/1, பூ பேகம், 3வது தெரு,
பார்டர் தோட்டம், மவுண்ட் ரோடு, சென்னை—2.


# தலையங்கம்



மாநிலத் தலைவர் **கோ.சீதாராமன்**

**அன்பார்ந்த பாசமிகு ஓய்வூதியர் சொந்தங்களே!**

வணக்கம். நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள், ஆளுகின்ற அரசிற்கு மகத்தான, மகிழ்ச்சியினை அளித்திருந்த நிலையில், நடந்து முடிந்த தமிழக சட்டமன்ற கூட்டத்தொடர் முடிவுக்குள், ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள், சத்துணவு, அங்கன்வாடி உதவியாளர்களுக்கான நியாயமான ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்துதல் போன்ற நீண்டகால நியாயமான கோரிக்கைகள் மீதான சாதகமான அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று மனப்பூர்வமாக எண்ணியிருந்த நமக்கு, எந்தவிதமான அறிவிப்புகளும் இல்லாதது பெருத்த ஏமாற்றத்தினை அளித்துள்ளது.

நிலுவையில் உள்ள இக்கோரிக்கைகள் மீது சாதகமான ஆணைகளைப் பெற்றிட இயக்க ரீதியான முடிவுகளை மேற்கொள்ள விரைவில் மாநில செயற்குழுக் கூட்டத்தினைக் கூட்டி முடிவெடுத்து செயல்படுத்துவோம். இது குறித்த விரிவான விபரங்களை விரைவில் அறிவித்திட மாநில மையம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மாநில மையத்திற்கென சொந்தமாக பெறப்பட்டுள்ள காலிமனையில், எழில்மிகு கட்டிடத்தினை உருவாக்கிட, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பொருள் மீதும் விரிவான அறிக்கைகளை சமர்ப்பித்து, கூட இருக்கும் மாநில செயற்குழுக் கூட்டத்தில் நல்ல பல முடிவுகளை மேற்கொண்டு, எடுத்த காரியத்தினை விரைவில் வெற்றிகரமாக முடித்து, சங்க வரலாற்றில் தொடர்ந்து சாதனை படைத்திடுவோம் என்பதையும் உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இச்சிறப்பான செயல்பாடுகளுக்கு அனைத்து மாவட்ட மையங்களும் முழுமனதுடன், முழுமையான ஒத்துழைப்பினை நல்கிடவும் வேண்டப்படுகிறது.

சங்க செயல்பாடுகளுக்கு உறுதி சேர்க்கும் அடிப்படைப் பணிகளான உறுப்பினர் சேர்க்கை, மாத இதழ் ஆண்டு சந்தா / மூன்றாண்டு சந்தா / புரவலர் சேர்க்கை / மாநில மைய கட்டிட நிதி போன்றவற்றில் மாவட்ட / வட்டக்கிளை நிர்வாகிகள் திட்டமிட்டு செயல்பட்டு 2024ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீட்டினை வெற்றிகரமாக முடித்திட உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

''ஒற்றுமையே நமது நிரந்தர பலம்''

(கோ.சீதாராமன்)

**மாநிலத்தலைவர்**

இதழில் வரும் செய்திகள் அனைத்தும் ஆசிரியர் குழுவின் முடிவுக்கு உட்பட்டது

## தமிழ்நாடு ஓய்வூதியர் நண்பன் இதழுக்கு

(புரவலர் நிதி ஆயுள் முழுவதும் ) ரூ.1500/— ஆண்டு சந்தா (12 மாதங்கள் ரூ. 200/—), 3 ஆண்டு சந்தா ரூ. 500/— நிதி அனுப்புவோர் தங்களுடைய வங்கி கேட்பு வரைவோலை — காசோலை மூலம், தங்களுடைய இல்ல / இருப்பிட முகவரியை தெளிவாக எழுதி, கீழ்க்கண்ட மத்திய சங்க முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம். பண விடைத்தாள் (M.O.) மூலம் அனுப்புவதை தவிர்த்தல் நன்று.

மாநிலத் தலைவர், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம் — சென்னை (“State President - Tamilnadu Pensioners’ Association” Chennai) என்ற பெயரில் வங்கி கேட்பு வரைவோலை — காசோலைகளை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம். (அல்லது) RTGS மூலமாகவும் அனுப்பலாம்.

**BANK OF INDIA** TRIPLICANE BRANCH
4/289, Bharathi Salai, Triplicane, Chennai-5.
**S.B. A/c No. 802010110009349** Tamilnadu Pensiones Association
IFSC code No. : BKID 0008020 Customer ID : 185301750

நேரிடையாக வங்கிக்கு அனுப்பிவைக்கும்படியும் அதன் ஜெராக்ஸ் நகல் எடுத்து அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் எந்த நோக்கத்திற்காக (Purpose) பணம் செலுத்தப்படுகிறது என்ற விபரத்தினையும் விரிவாக தெரியபடுத்தவும்.

**கோ.சீதாராமன்**, மாநிலத் தலைவர்
தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம் ''சிவ. இளங்கோ இல்லம்''
7, நீலி வீராசாமி தெரு, திருவல்லிக்கேணி — சென்னை — 600 005.
**Cell: 9444302896/80562 44463**

**— மாநில மையம்**

## பட்டுக்கோட்டை வட்டக்கிளையின் மாதாந்திரக்கூட்டம்







தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டக்கிளையின் ஜூலை மாதக்கூட்டம் 20.07.2024 அன்று சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில் பட்டுக்கோட்டை பேருந்து நிலையம் ஹோட்டல் மெரினா விழா அரங்கின் முதல் தளத்தில் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில், தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் திரு உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு, அவர்களின் சாதனைகளையும் தியாகங்களையும் விளக்கி புகழாரம் சூட்டப்பட்டது. கூட்டத்தில், கலந்து கொண்டவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டன. இம்மாதம் பிறந்த நாள் காண்போருக்கு சால்வை அணிவித்து வாழ்த்துரை வழங்கப்பட்டது. அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதியாக நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

# கேள்வி – பதில்

## பதிலளிப்பவர்


திரு. **R.சபாபதி,** M.A., M.Com., M.B.A., B.G.L., D.L.L.A.L.D.C.A.C.J.

கருவூலத்துறை இணை இயக்குநர் (ஓய்வு)


**கேள்வி 1 :** நான் கண்காணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எனது வயது 88 ஆகிறது. எனது மனைவிக்கு வயது 85 ஆகிறது. எனது மனைவி எழுதப் படிக்கத் தெரியாதவர். அவருக்கு வயது முதுமையின் காரணமாக அதிக மறதி உள்ளது. எனது காலத்திற்குப் பின் ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதியைப் பெற எனது மகளை நாமினேஷன் செய்ய இயலுமா ?

**திரு.ஆர்.சோமையா, புதுக்கோட்டை**

**பதில் :** தாங்கள் ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதியைப் பெற தங்கள் மகளை நாமினேஷன் செய்யலாம். மனைவி உயிருடன் இருக்கும்பொழுது ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்கு வேறு ஒருவரை நாமினேஷன் செய்ய அரசுக் கடித எண்.30948/ஓய்வூதியம்/2022, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.30.08.2022 (நகல் இணைக்கப்பட்டுள்ளது) வழி வகை செய்கிறது. எனவே தாங்கள் நாமினேஷன் படிவத்தை கருவூலத்தில் அளித்து, கையொப்பம் பெற்று, தங்கள் பென்சன் புத்தகத்தில் ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள். தங்கள் காலத்திற்குப் பிறகு, ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித்தொகை தாங்கள் நாமினேஷன் எழுதி வைத்த தங்கள் மகளுக்குக் கிடைக்கும்.

**கேள்வி 2 :** எனது கணவர் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியராகப் பணியாற்றி, ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று காலமாகிவிட்டார். நான் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகிறேன். நான் அரசாணை எண்.235/பத்தி (vi) மற்றும் அரசாணை 313/பத்தி 5(2)ன் கீழ் திருந்திய ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் கோரி விண்ணப்பங்களை துறை அலுவலர் மூலமாக கருவூலத்தில் சமர்ப்பித்தேன். ஆனால், அரசாணை 235/பத்தி (vi) மற்றும் அரசாணை 313/பத்தி 5(2)ன் கீழ் ஓய்வூதிய நிலுவைத்தொகையை ஆயுட்கால நிலுவை ஓய்வூதியமாக வழங்கலாமா ? என்று உயர் அலுவலர்களிடம் தெளிவுரை கோரியுள்ளதாக கருவூலத்தில் தெரிவித்து திருந்திய ஓய்வூதிய விண்ணப்பங்களை நிலுவையில் வைத்துள்ளனர். இது சரியா ?

**திருமதி.எஸ்.கற்பகவள்ளி, திருப்பத்தூர்**

**பதில் :** அரசாணை 235/பத்தி (vi) மற்றும் அரசாணை 313/பத்தி 5(2)ன் கீழ் ஓய்வூதிய நிலுவைத் தொகையை, ஆயுட்கால நிலுவை ஓய்வூதியமாக வழங்கலாம் என்று அரசுக் கடித எண்.E-3122561/ஓய்வூதியம்/2022–1, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.03.10.2022ல் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) அரசு தெளிவுரை வழங்கியுள்ளது. இந்த அரசுக் கடித நகலினை இணைத்து கருவூலத்தில் விண்ணப்பித்து பணப்பயன் பெறலாம்.

**கேள்வி 3 :** எனது கணவர் பொதுப்பணித்துறையில் சிறப்பு நிலை ஓட்டுநராகப் பணியாற்றி 30.06.2001 அன்று பணி ஓய்வு பெற்று, ஓய்வூதியம் பெற்று, 26.10.2005 அன்று காலமானார். நான் குடும்ப ஓய்வூதியத்தை 27.10.2005 முதல் பெற்று வருகிறேன். எனது பென்சன் புத்தக நகலினை அனுப்பி வைத்துள்ளேன். எனக்கு சரியான வீதத்தில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா ?

**திருமதி.சி.திலகவதி, பெரம்பலூர்**

**பதில் :** தங்களுக்கு குறைவான வீதத்தில் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை எண்.65, நிதி (ஊ.கு) துறை, நாள்.26.02.2011ன்படி ஓட்டுநர்களின் ஊதியம் ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2000/–லிருந்து, ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2400/– ஆக 01.01.2006 முதல் கருத்தியலாகவும், 01.03.2011 முதல் பணப்பயனுடனும் உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனவே சிறப்பு நிலை ஓட்டுநர் பதவியின் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் 01.03.2011 மற்றும் 01.10.2017 முதல் முறையே ரூ.4160/– மற்றும் ரூ.10770/–

ஆகும். எனவே தாங்கள் 01.03.2011 முதல் அதிக குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய நிலுவைத்தொகை பெறுவதற்கு இயலும் வகையில், அரசாணை 235 / பத்தி (vi) மற்றும் அரசாணை 313 / பத்தி 5(2)ன் கீழ் விண்ணப்பங்கள் தயார் செய்து இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த விண்ணப்பங்களை தாங்கள் கணவர் இறுதியாக பணியாற்றிய அலுவலகம் மூலம் கருவூலத்திற்கு அனுப்பி வைத்து பயன் பெறலாம்.

**கேள்வி 4 :** தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ள நிலையில் எனது உறவினர் இறந்துவிட்டார். அவருடைய மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் கிடைக்குமா ?

**திரு.எம்.சின்னசாமி, கோபிசெட்டிப்பாளையம்**

**பதில் :** அரசாணை எண்.2999, பொதுத்துறை, நாள்.04.12.1969ன்படி, அரசு ஊழியர் இறந்துவிட்டால், அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்தாகிவிடும். இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு ஓய்வூதிய விதி எண்.72 (11), (2)ன்படி தங்கள் உறவினரின் மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் கிடைக்கும்.

**கேள்வி 5 :** எனது உறவினர் 10(a)(1) ன் கீழ் தற்காலிகமாக அரசுப் பணியில் சேர்ந்துள்ளார். அவருக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சந்தா தொகையை எப்போது பிடித்தம் செய்வார்கள் ?

**திரு.எஸ்.சேகர், ஈரோடு**

**பதில் :** 10(a)(1) ன் கீழ் தற்காலிகமாக அரசுப் பணியில் சேர்ந்தவர்களின் ஊதியத்திலிருந்து பங்களிப்பு ஓய்வூதிய சந்தா தொகை பிடித்தம் செய்யக்கூடாது. ஆனால் சில அலுவலகங்களில் சந்தாத் தொகை பிடித்தம் செய்கிறார்கள். அரசுக் கடித எண்.42789/நிதி (ஓ.கு.தீ)/2001, நிதித்துறை, நாள்.24.12.2021ல் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) அரசுத்துறை மற்றும் நீதிமன்றங்களில் 10(a)(1) ன் கீழ் தற்காலிக பணி நியமனம் பெற்ற பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சந்தா தொகை பிடித்தம் செய்வதை உடனடியாக நிறுத்தம் செய்வது மட்டுமல்லாது, அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட சந்தாத் தொகைக்கு அரசால் அந்தந்த காலத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட வட்டியுடன் கணக்கிட்டு, பிடித்தம் செய்யப்பட்ட சந்தாத் தொகையை உடனடியாக திரும்ப வழங்கிட வேண்டும் என்றும், அரசின் சமமான பங்களிப்புத் தொகை திரும்ப வழங்கத் தேவையில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, 10(a)(1) ன் கீழ் தற்காலிக பணியில் சேர்ந்த தங்கள் உறவினரின் ஊதியத்திலிருந்து பங்களிப்பு ஓய்வூதிய சந்தாத்தொகை பிடித்தம் செய்யமாட்டார்கள்.

**கேள்வி 6 :** நான் வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணியாற்றி 31.12.1995 அன்று பணி ஓய்வு பெற்று, ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எனது ஓய்வூதிய புத்தக நகலினை அனுப்பி வைத்துள்ளேன். எனக்கு சரியான வீதத்தில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா ?

**திரு.என்.ஜெயக்குமார், திண்டுக்கல்**

**பதில் :** தங்களுக்கு ஓய்வூதியம் குறைவாக வழங்கப்பட்டு வருகிறது. தங்களின் நிகரப் பணிக்காலம் 31 வருடம், 04 மாதம், 18 நாட்கள் ஆகும். தாங்கள் பணி ஓய்வு பெற்ற பொழுது 33 ஆண்டுகள் பணியாற்றி இருந்தால்தான் முழு ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற விதிமுறை இருந்ததால் தங்களுக்கு விகிதாச்சாரத்தின்படி ஓய்வூதியம் குறைவாக நிர்ணயம் செய்து வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை 245, நிதி (ஓய்வூதியம்) துறை,நாள்.19.07.2018ல் 30 ஆண்டுகள் பணியாற்றியிருந்தாலே முழு ஓய்வூதியம் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அரசாணையின்படி திருந்திய ஓய்வூதிய கருத்துரு தயார் செய்து அனுப்பி வைக்கப்படுகிறது. இதனை தாங்கள் இறுதியாகப் பணியாற்றிய அலுவலகம் மூலம் சென்னை மாநில கணக்காயருக்கு அனுப்பி வைத்து, அதிக ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத்தொகை பெற்று பயன் பெறலாம்.

**கேள்வி 7 :** எனது தந்தையார் கிராம முன்சீப் ஆக பணியாற்றி, பணி ஓய்வு பெற்று காலமாகிவிட்டார். எனது தாயாரும் காலமாகிவிட்டார். எனது கணவரும் காலமாகிவிட்டார். நான் அரசு ஊழியரின் விதவை மகள் என்ற அடிப்படையில் குடும்ப ஓய்வூதியம் பெற இயலுமா ?

**திருமதி.என்.விஜயலட்சுமி, தாராபுரம்**

**பதில் :** கிராம முன்சீப் பதவி சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்தின் கீழ் உள்ளது. அரசுக் கடித எண்.14254/ஓய்வூதியம்/2022, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.12.01.2022ல் சிறப்பு காலமுறை ஊதிய

விகிதத்தின் கீழ் உள்ள கிராம முன்சீப் பதவி வகித்தவர்களின் விதவை மகள்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கத் தேவையில்லை என்று அரசு தெளிவுரை வழங்கியுள்ளது. எனவே தாங்கள் குடும்ப ஓய்வூதியம் பெற இயலாது.

**கேள்வி 8 :** நான் தேர்வுநிலை உதவி வேளாண்மை அலுவலராகப் பணியாற்றி 30.11.2011ல் பணி ஓய்வு பெற்று, ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எனக்கு 12.10.2008 அன்று தேர்வுநிலை வழங்கப்பட்டது. நான் அரசாணை 234, நிதி (ஊ.கு) துறை, நாள்.01.06.2009ன் கீழ் அதிகப் பணப்பயன் பெறும் விதத்தில் விருப்பம் அளிக்கத் தவறிவிட்டேன். இதன் விளைவாக தர ஊதியம் ரூ.2800/– வழங்கப்பட்டு ஓய்வூதியம் குறைவாக உள்ளது. ஆனால் என்னைப் போன்ற தேர்வு நிலை உதவி வேளாண்மை அலுவலர்கள் தர ஊதியம் ரூ.4300/– பெற்று அதிக ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். நான் அதிக ஓய்வூதியம் பெற ஏதேனும் வழி உள்ளதா ?

**திரு.ஆர்.விமலநாதன், தூத்துக்குடி**

**பதில் :** தாங்கள் மூத்தோர் – இளையவர் ஊதிய முரண்பாடுகளை சரி செய்தலுக்கான விண்ணப்பம் அளித்து அதிக ஊதியம் பெற்ற இளையவருக்கு இணையாக ஊதிய நிர்ணயம் செய்து ஆணை பெற வேண்டும். இதன் மூலம் தாங்கள் இளையவருக்கு இணையாக அதிக ஊதியம் பெறலாம். அதன் பிறகு திருந்திய ஓய்வூதிய கருத்துருவை சென்னை மாநில கணக்காயருக்கு அனுப்பி வைத்து அதிக ஓய்வூதியப் பலன்களைப் பெறலாம்.

**கேள்வி 9 :** நான் இளநிலை டிராக்டர் ஓட்டுநராகப் பணியாற்றி, 31.05.2009 அன்று பணி ஓய்வு பெற்று, ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எனது பென்சன் புத்தக நகலினை இணைத்து அனுப்பி வைத்துள்ளேன். எனக்கு சரியான வீதத்தில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா ?

**திரு.எம்.வெங்கடாசலம், அறந்தாங்கி**

**பதில் :** தங்களுக்கு குடும்ப ஓய்வூதியம் குறைவாக வழங்கப்பட்டு வருகிறது. தாங்கள் பணி ஓய்வு பெற்ற பிறகு, பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.249, நிதி (ஊ.கு) துறை, நாள்.22.07.2013ன்படி இளநிலை டிராக்டர் ஓட்டுநர் பதவியின் ஊதியம் ரூ.5200–20200 + தரஊதியம் ரூ.2000/–லிருந்து ரூ.5200–20200 + தரஊதியம் ரூ.2400/– ஆக 01.01.2006 முதல் கருத்தியலாகவும், 01.04.2013 முதல் பணப்பயனுடனும் உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி தங்கள் ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்படவில்லை. உரிய விண்ணப்பங்கள் தயார் செய்து அனுப்பி வைக்கப்படுகிறது. இவற்றை தாங்கள் இறுதியாக பணியாற்றிய அலுவலகத்தில் அளித்து, அதிக ஓய்வூதியப் பலன்கள் மற்றும் ஓய்வூதிய நிலுவைத்தொகை பெற்று பயன் பெறலாம்.


## கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:

திரு.**ஆர். சபாபதி,** M.A.,M.Com., M.B.A., B.G.L., D.L.L.A.L. D.C.A.C.J.
கருவூலத்துறை இணை இயக்குநர் (ஓய்வு)
எண். 1 முதல் தெரு, K.M.G. நகர், தலத் தெரு அஞ்சல், காரைக்கால் மாவட்டம் – 609 605.
கைபேசி எண்கள் : 96556 18699 / 94861 16037


## இயற்கை எய்தினார்



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், திருவள்ளூர் மாவட்டம் முன்னாள் அமைப்புச்செயலாளர் திரு.பி.கே.எஸ்.சிவலிங்கம் அவர்களின் மூத்த மகள் திருமதி.எம்.எல்.ரேணுகா தேவி அவர்கள் (வயது 40) 16.07.2024 அன்று மாரடைப்பு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் மாவட்டத்தலைவர் திரு.கோட்டீஸ்வரன், பொருளாளர் திரு.த.ஜெயசந்திரன், அமைப்புச்செயலாளர் திரு.கோபாலகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர் திரு.கே. தனசேகரன், துணைத்தலைவர் திரு.ஜி.ரவி மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். – **லோ.கோட்டீஸ்வரன்**, தலைவர், திருவள்ளூர் மாவட்டம்

## TREASURIES AND ACCOUNTS DEPARTMENT

From
Thiru.K.Vijayendra Pandian, IAS.,
Commissioner of Treasuries and Accounts,
3rd Floor, Perasiriyar K.Anbazhagan Maaligai,
No.571, Anna Salai,
Nandanam, Chennai-35

To
The Pay and Accounts Officers
The Pension Pay Officer, Chennai
The Treasury Officers
The Sub Pay and Accounts Officers,

Rc.No. 526 / NHIS-2/2024 Dated. 19-07-2024

Sir / Madam,

Sub: New Health Insurance Scheme - Time frame for acceptance of reimbursement claim documents for hospital admissions from 01.07.2023 to 30.06.2024 for both Employees and Pensioners – Regarding

Ref:
1. G.O.Ms.(No).160, Finance(Salaries) Department, Dated:29.06.2021
2. G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.06.2022
3. United India Insurance Company Ltd., Chennai letter No.010600/Health / 2106 / 2024 dated 21.6.2024
4. Commissioner of Treasuries and Accounts, Chennai 35 letter Rc.No.526/NHIS-2/2024 dated 27.6.2024 addressed to the Government
5. The Government Letter No.29735/Finance (HI-2)/2023-2 dated 14.7.2024

In the Government Order first and second read above, orders were issued for implementation of New Health Insurance Scheme , 2021 for Employees and New Health Insurance Scheme, 2022 for Pensioners respectively to provide Health Care assistance through United India Insurance Company Limited.

In the reference third cited, the United India Insurance Company Limited has requested to issue necessary instructions and guidelines to all Government Employees, Pensioners and Organisations Employees to submit all the reimbursement claim documents for admissions from 01.07.2023 to 30.06.2024 to the United India Insurance Company Limited on or before 16.08.2024, so that their accounting process be completed within the stipulated time.

In this regard, vide reference 5th cited, the Government have accorded permission to adhere the following cutoff dates in respect of the reimbursement claims pertaining to the treatment taken from 01.07.2023 to 30.06.2024 for employees and Pensioners.

In this regard, the Subordinate Officers are instructed to take necessary action on the following:

1. To communicate the above time limit regarding the submission of reimbursement claims pertaining to the treatment taken from 01.07.2023 to 30.06.2024 for employees and Pensioners under New Health Insurance Scheme to the notice of the Drawing and Disbursing Officers and Pensioners Associations so as to create awareness among the Employees and Pensioners

2. To display the communications in the notice board.

3. To inform the above communication to the Joint Director of Health Services

4. To co-ordinate with the District Collectors to convene the District Level Empowered Committee meeting within the stipulated time.

5. To forward the reimbursement appeals to the United India Insurance Company Limited within the time limit prescribed.

Further, it is informed that since the cut off date for submission of appeal petitions to the concerned Joint Director of Health Services for placing the reimbursement claims in District Level Empowered Committee is fixed as 31.12.2024, the appeal petitions (pertaining to the hospital admissions from 01.07.2023 to 30.06.2024) received after 31.12.2024 shall be returned to the petitioners with the following remarks.

“The New Health Insurance Scheme Medical reimbursement claim of the petitioner is returned due to the following reasons.

The United India Insurance Company Limited has already given cut off date for placing the claims pertaining to hospital admissions from 01.07.2023 to 30.06.2024 in District Level Empowered Committee. The same was communicated to Employees through Drawing and Disbursing Officers and to Pensioners through the Pension disbursing authority.

United India Insurance Company has also informed that they shall not be in a position to reopen their books of accounts of earlier Schemes as per their Industry guidelines.

The Petitioner has taken the medical treatment before 01.07.2024 and he / she has not submitted the reimbursement request on time. Therefore, the medical reimbursement claim could not be placed before the District Level Empowered

Committee within the cut-off date

Hence, the reimbursement claim of the petitioner received beyond 31.12.2024 cannot be processed and is hereby returned".

Further it is informed that applications are being forwarded by the Joint Director of Health Services / Treasury Offices for placing in State Level Empowered Committee without being placed in District Level Empowered Committee. Therefore, it is reiterated that applications already placed before District Level Empowered Committee can only be placed in State Level Empowered Committee in case of any grievance arising out of recommendations of District Level Empowered Committee.

Top priority shall be given in this subject matter.

**VIJAYENDRA PANDIAN K**
Commissioner of Treasuries and Accounts

## அரியலூர் மாவட்டத்தில் தானைத் தலைவர் அமரர் சிவ இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய இயக்கத்தின் முன்னோடியும், அரசு அலுவலர் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்ற அரசு அலுவலர்களின் வளமான வாழ்விற்கும், பலகட்ட போராட்டங்களை நடத்தி, நீண்டகால பயன்பெறும் வகையில், பல்வேறு கோரிக்கைகளைப் பெற்றுத்தந்த என்றும் அழியா புகழ் பெற்ற அரசு அலுவலர்களின் தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் **88** வது பிறந்த நாள் விழா நிகழ்ச்சி, **18.07.2024** புதன்கிழமை அன்று ஓய்வூதியர் சங்க, அரியலூர் மாவட்டத்தின் சார்பில், அரியலூர் மாவட்ட அரசு அலுவலர் ஒன்றிய கட்டிடத்தில், அரியலூர் மாவட்டத் தலைவர் திரு.எம்.வி.மருதமுத்து அவர்களின் தலைமையில் வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது. மாவட்டச்செயலாளர் திரு.எஸ்.தங்கராஜ், மாவட்ட துணைத்தலைவர் திருமதி.டி.புஷ்பாஞ்சலி, பொருளாளர் திரு.டி.கோவிந்தராசு, அமைப்புச்




செயலாளர் திரு.எம்.கனகசபை ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

**– எம்.வி.மருதமுத்து**, மாவட்டத்தலைவர்,
அரியலூர்



கிருஷ்ணகிரி வ.க.அ பணிபுரியும் திரு. சு.கங்காதரன் கண்காணிப்பாளர் அவர்கள் யுடைய திருமணம் மணமகன் S. கணேஷ் மணமகள் ழு அருணா என்பாருக்கு **16.6.2024** கிகிரி மீனாட்சி மஹால் திருமணம் வரவேற்பு விழா வருகை புரிந்த திரு.சு.ராமகிருஷணன் மேனாள் மாவட்ட தலைவர் TEDOSA பிராசாத் கண்காணிப்பளார் நாகராஜன் நேர்முக உதவியாளர் தில்லை நடராஜன் கண்காணிப்பாளர் திருமணம் விழாவில் கலந்து கொண்ட நிகழ்வு.

# FINANCE [Health Insurance] DEPARTMENT

**G.O.Ms.No.214, Dated 24 June, 2024.**

*(Krothi, Aani- 10, Thiruvalluvar Aandu 2055)*

## ABSTRACT

New Health Insurance Scheme, 2021 for the Employees of Government Departments and other Organizations and New Health Insurance Scheme, 2022 for Pensioners/ Family Pensioners - Empanelment of Accredited Hospitals - Approval of 84 additional hospitals, inclusion of Additional specialties in 02 hospitals and for deletion 14 hospitals based on the recommendations of the Accreditation Committee — Notified — Orders -Issued.

**Read the following:-**

1. G.O.(Ms).No0.239, Finance (Salaries) Department, Dated: 13-07-2018.
2. G.O.(Ms).No.160, Finance (Salaries) Department, Dated: 29.06.2021.
3. G.O.(Ms).No.71, Finance (Health Insurance-I) Department, Dated: 21.03.2022.
4. G.O.(MSs).No.204, Finance (Health Insurance) Department, Dated: 30.06.2022.
5. G.O.(Ms).No.376, Finance (Health Insurance) Department, Dated: 26.12.2022.
6. G.O.(Ms).No.227, Finance (Health Insurance) Department, Dated: 17.07.2023.
7. G.O.(Ms).No.298, Finance (Health Insurance) Department, Dated: 12.10.2023.
8. From the Commissioner of Treasuries and Accounts, Letter.Rc.No.514/NHIS-2/2023, Dated:28.03.2024.

***

## ORDER:

1. In the Government Order first read above, Government have constituted the Accreditation Committee for empanelment of accredited hospitals consisting of the Commissioner of Treasuries and Accounts as Head of the Committee, the Director of Medical and Rural Health Services and a representative of United India Insurance Company Limited as Members of the Committee for empanelment of accredited hospitals and also to monitor the guality of treatment for the employees of Government Department and other organizations covered under New Health Insurance Scheme. Further, Sub-Committees were constituted at District Level consisting of Joint Director, Medical and Rural Health Services, Treasury Officer and a representative of United India Insurance Company Limited to assist the Accreditation Committee for empanelment of private hospitals in various Districts across the State under New Health Insurance Scheme.

2. In the Government Order second and fourth read above, orders have been issued for the implementation of New Health Insurance Scheme, 2021 for Employees and New Health Insurance Scheme, 2022 for Pensioners / Family Pensioners to provide Health Care Assistance to the employees of Government Departments, Public Sector Undertakings, Statutory Boards, Local Bodies, State Government Universities, willing State Government Organizations / Institutions and their eligible family members and in the case of Pensioners, their spouse are covered with a provision to avail cashless assistance upto Rs.5.00 lakh (Rupees Five Lakh only) and an enhanced assistance of Rs.10 lakh has been allowed for specific illness like Cancer, for certain organ transplantations, etc., for a block of 4 years on selection of a suitable Public Sector Insurance Company through National competitive bidding. As per the Guidelines for implementation of New Health Insurance Scheme 2021 and New Health Insurance Scheme 2022 under Clause 9(2), all hospitals already accredited under New Health Insurance Scheme 2016/2018 shall automatically be deemed to be networked hospitals.

3. In the Government Order third read above, orders have been issued for empanelment of 56 new additional hospitals, 1 hospital for name change, 1 hospital for address change and deletion of 2 hospitals under New Health Insurance Scheme, 2021.

4. In the Government Order fifth read above, orders have been issued for empanelment of 55 new Additional hospitals, Additional Specialties in 42 hospitals and deletion of 4 hospitals under New Health Insurance Scheme, 2021 for the Employees of Government Departments and other Organizations and New Health Insurance Scheme, 2022.

5. In the Government Order sixth read above, orders have been issued for empanelment of 79 new Additional hospitals, Additional Specialties in 19 hospitals and deletion of 23 hospitals under New Health Insurance Scheme, 2021 for the Employees of Government Departments and other Organizations and New Health Insurance Scheme, 2022.

6. In the Government Order seventh read above, orders have been issued for deletion of 34 hospitals under New Health Insurance Scheme, 2021 for the Employees of Government Departments and other Organizations and New Health Insurance Scheme, 2022. So far approved Hospitals under New Health Insurance Scheme 2021 / New Health Insurance Scheme 2022 is 1296 and 1294 respectively.

7. The Implementation procedures for New Health Insurance Scheme, 2021/ New Health Insurance Scheme 2022 included as Annexure-A to the Government Orders second and fourth read above, provides for inclusion of additional list of approved hospitals and treatments / surgeries based on the report of the Accreditation Committee.

8. The Commissioner of Treasuries and Accounts in his letter eighth read above has submitted proposal to include 84 new additional hospitals as approved network hospitals, additional specialties in 02 hospitals and for deletion 14 hospitals under New Health Insurance Scheme, 2021 for Employees and New Health Insurance Scheme, 2022 for Pensioners / Family Pensioners as recommended by the Accreditation Committee.

9. The Government after careful consideration of the recommendations of the Accreditation Committee, have decided to include and approve 84 new additional hospitals as network hospitals, additional specialties in 02 hospitals and for deletion 14 hospitals under New Health Insurance Scheme, 2021 for Employees and New Health Insurance Scheme, 2022 for Pensioners / Family Pensioners as detailed in the Annexure I, N and II to this order and issue orders accordingly.

(BY ORDER OF THE GOVERNOR)

**S.NAGARAJAN**
**SECRETARY TO GOVERNMENT**
**[EXPENDITURE]**

தமிழ்நாடு அரசின் அரசு ஊழியர்களுக்கு / ஓய்வூதியர்களுக்கு மருத்துவ காப்பீடு திட்டத்தில் புதியதாக 84 மருத்துவமனைகள் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் நீக்கப்பட்ட 14 மருத்துவமனைகளின் பட்டியலும் இணைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## இரங்கல் செய்தி



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், திருப்பூர் மாவட்டப் பொருளாளரும், பணி நிறைவு பெற்ற தலைமை சர்வேயரும், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் திருப்பூர் மாவட்ட துணைத்தலைவராக பணியாற்றியவரும், சங்கத்தின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவரும், பணியிலிருக்கும் பொழுதும், பணிநிறைவுக்குப் பின்னரும் தனது கருத்துக்களை ஆணித்தரமாகவும், தைரியமாகவும் சங்கக் கூட்டங்களிலும், உயர் அலுவலர்களை சந்திக்கும்பொழுதும் எடுத்துக்கூறி சங்கத்திற்கு வலு சேர்த்தவர், இயக்கப் பணியில் முன்னிலை வகித்தவர் திரு. மு.நந்தகோபால் அவர்கள், கடந்த **10.07.2024** அன்று உடல்நலக் குறைவு காரணமாக கோவை கே.எம்.சி.எச். மருத்துவமனையில் காலமாகி, பின்னர் அவரது உடல் சொந்த ஊரான தாராபுரத்திற்கு எடுத்து வரப்பட்டது.

திருப்பூர் மாவட்ட மற்றும் வட்டக்கிளைகளின் சார்பில், மாவட்டத்தலைவர் அ.சென்னியப்பன், மாவட்டச் செயலாளர் செ.அந்தோணிசாமி, அவிநாசி வட்டக்கிளைத்தலைவர் பொ.சோமசுந்தரம், தாராபுரம் வட்டக்கிளைத்தலைவர் சி.விஜயகுமார், பொருளாளர் குப்புசாமி, மத்திய செயற்குழு உறுப்பினர் இரா.பன்னீர்செல்வம் மற்றும் மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகளும், உறுப்பினர்களும் நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

– **அ.சென்னியப்பன்**, மாவட்டத்தலைவர், திருப்பூர்

# சீர்காழி வட்ட ஓய்வு பெற்ற அலுவலர் சங்கத்தின் மாதாந்திர செயற்குழு கூட்டம்







சீர்காழி வட்ட ஓய்வு பெற்ற அலுவலர் சங்கத்தின் மாதாந்திர செயற்குழு கூட்டம் 06.07.2024 அன்று காலை 10 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வட்டத்தலைவர் ஆர். கல்யாணசுந்தரம் தலைமை தாங்கினார், தமிழ்த்தாய் வாழ்த்துக்கு பின், திரு.டி.ஆர். கலியபெருமாள், துணைத்தலைவர், வரவேற்புரை ஆற்றினார், திரு.என்.ரத்தினசபாபதி, செயல் தலைவர் சென்ற மாத கூட்ட அறிக்கையை வாசித்தார். தொடர்ந்து திரு.எஸ்.அன்பழகன், செயலாளர், திரு.ஜே.சண்முகம், திரு என்.ரத்தினசபாபதி ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

1) நமது சங்க உறுப்பினரும், விவசாயத்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவருமான திருவெண்காடு சேர்ந்த திரு.சேகர் அவர்கள் இயற்கை எய்தியமைக்கு இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது .

2) கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் காலை தேநீர், மதியம் விருந்து அளித்த திரு. என்.கலியமூர்த்தி, தென்பாதி, திரு. இரா. பிச்சை, தென்பாதி, திருமதி டீ. தேன்மொழி, புத்தூர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டு, அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக திரு.என்.அன்பழகன் நன்றியுரை ஆற்றினார். தொடர்ந்து தேசிய கீதம் பாடியதும், கூட்டம் நிறைவுற்றது.

**— ஆர். கல்யாணசுந்தரம், தலைவர்.**

# திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டக்கிளை மாதாந்திரக் கூட்டம்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டக்கிளையின் மாதாந்திரக் கூட்டம் 13.07.2024 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில், தாராபுரம் அரசு அலுவலர் ஒன்றிய சங்க கட்டிடத்தில், வட்டக்கிளைத்தலைவர் திரு.சி.விஜயகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு பேச்சாளராக சங்கத்தின் முன்னோடி தலைவர் திரு.மா.செல்லமுத்து அவர்கள் முன்னிலை வகித்து சிறப்புரையாற்றினார். மாவட்ட சங்க நிர்வாகிகளான துணைத்தலைவர்கள் திருமதி.காளியாத்தாள், திருமதி.மங்கையர்கரசி, திரு.ஜி.நாகராஜ் மற்றும் வட்டக்கிளை நிர்வாகிகள் திரு.ஜே.விஜயராகவன், திரு.எம்.வெங்கடாசலம் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) திருப்பூர் மாவட்டப் பொருளாளர் திரு.எம். நந்தகோபால் அவர்கள் கடந்த 10.07.2024 அன்று உடல்நலக் குறைவால் காலமானார். அவரது மறைவுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

2) தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் தானைத்தலைவர் திரு.சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா 18.07.2024 அன்று தாராபுரம் வட்டக்கிளையில் சிறப்பாக நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.





3) அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.7500/– உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாநில மையத்தை கேட்டுக் கொள்கிறது.

இந்த கூட்டத்தின் முடிவில் தாராபுரம் வட்டக்கிளை பொருளாளர் திரு.எம்.குப்புசாமி அவர்கள் நன்றி தெரிவிக்க கூட்டம் நிறைவுற்றது.

**– சி.விஜயகுமார், தலைவர், தாராபுரம் வட்டக்கிளை**

# பெரம்பலூர் மாவட்ட மாதாந்திரக் கூட்டம்







தமிழ்நாடு ஒய்வூதியர் சங்க பெரம்பலூர் மாவட்ட மாதாந்திரக்கூட்டம், **06.07.2024** அன்று சனிக்கிழமை காலை **10.00** மணியளவில், புது பஸ்டாண்டு அருகில், எஸ்.கே.சி. நகரில் உள்ள சிவ.இளங்கோ இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டத்தலைவர் திரு.கு.சக்கரபாணி தலைமை வகித்தார். மாவட்டச்செயலாளர் திரு.ரெ.சிங்கப்பெருமாள் முன்னிலை வகித்தார். மாவட்ட துணைத்தலைவர் திரு.க.பழனிமுத்து, ஆ.செல்வராஜ் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். கூட்டத்தில், மாநிலத் துணைத்தலைவர் ஓவியர் திரு.கி.முகுந்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாவட்டத்தலைவர் வெ.சீவகன், தமிழ்நாடு கிராம ஊராட்சி பணியாளர்கள் சங்கத்தின் மாவட்டத்தலைவர் மு.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கூட்டத்தில், ஜூலை மாதம் பிறந்த நாள் காணும் திரு.எம்.ஞானப்பிரகாசம், வனக்காப்பாளர் (ஓய்வு) (ஜூலை **1**), திரு.எஸ்.சுந்தரராஜன், வேளாண்மை அலுவலர் (ஜூலை **2**), திரு.டி.திருவேங்கடம், காவலர் (ஓய்வு) (ஜூலை **9**), திரு.இர.தணிகேசன், அமைச்சுப்பணி உதவியாளர் (ஓய்வு) (ஜூலை **15**), திரு.ம.செந்தமிழ்செல்வன், கூடுதல் வேளாண்மை இயக்குநர் (ஓய்வு) (ஜூலை **21**) ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில், கௌரவத்தலைவர் செந்தமிழ் செல்வன், சங்க ஆலோசகர் சி.அண்ணாதுரை, மாவட்ட துணைத்தலைவர்கள் மு.அருணாசலம், மு.தெய்வமணி, ஆ.செல்வராஜ், கு.மாயவேல், இணைச்செயலாளர்கள் மா.பொன்னுச்சாமி, பி.மணி, சி.இரத்தினம், மு.சண்முகம், அமைப்புச்செயலாளர் க.பாலகிருஷ்ணன், மாவட்ட பிரச்சாரச் செயலாளர் என்.சுந்தரராஜபெருமாள், மத்திய செயற்குழு உறுப்பினர்கள் தி.பெரியசாமி, வீ.லெட்சுமணன், மகளிரணி செயலாளர் திருமதி.சு.புஷ்பராணி, ஆலத்தூர் வட்டக்கிளைத்தலைவர் ஜோ.வேல்முருகன், செயலாளர் வா.பா.கருணாநிதி, பொருளாளர் வே.நல்லசெல்வம், வேப்பந்தட்டை கிளைத்தலைவர் பெ.ரெங்கசாமி, செயலாளர் அப்துல்சலாம், பொருளாளர் சி.வீராசாமி ஆகியோர் உரையாற்றினர். முடிவில் மாவட்ட பொருளாளர் திரு.ப.முருகையா நன்றி கூறினார். கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**1)** அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் மருத்துவ காப்பீடு திட்டத்தில், அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறலாம் என்ற எங்கள் கோரிக்கையினை ஏற்று உத்திரவிட்டதற்கும், சட்டமன்ற கூட்டத் தொடரில், மருத்துவ காப்பீடு திட்டத்தில் தாய், தந்தையர்களுக்கும் மருத்துவ சிகிச்சை பெற அனுமதித்ததற்கும் பெரம்பலூர் மாவட்ட மாதாந்திர கூட்டத்தின் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம். மேலும், மருத்துவ காப்பீடு திட்டத்தை தனியார் நிறுவனம் மூலம் நடத்துவதை அரசே ஏற்று மருத்துவத்துறை மூலம் செயல்படுத்தினால் பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கக் கூடியதாகவும் செலவினம் போக மீதித் தொகை அரசுக்கு நிதியாக சேர்ந்து வரும் என்பதை கருத்தில் கொண்டு செயல்படுத்திட மாண்புமிகு முதல்வரை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

**2)** தமிழனத்தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் நிறைவு விழாவினை கொண்டாடும் இந்த நல்ல தருணத்தில் தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலத்தலைவர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்களுக்கு முக்கியமான **10** அம்சக் கோரிக்கைகளை வேண்டுகோளாக சமர்ப்பித்த மனுவினை கனிவுடன் பரிசீலித்து நிறைவேற்றிட இம்மாதாந்திரக் கூட்டத்தின் மூலம் பணிவுடன் வலியுறுத்துகிறோம்.

**3)** குடும்ப ஓய்வூதியர்கள் இறந்துவிட்டால், அவர்களின் இறுதிச்சடங்கிற்காக அவரது வாரிசுதாரர்களுக்கு ரூ.25,000/– வழங்கினால் அவர்களின் கடைசி யாத்திரை அடக்கம் செய்ய தயங்காமல் செய்வார்கள். பல்வேறு விதங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலட்சம் லட்சமாக வழங்கும்போது, குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்குவது தவறாக இருக்காது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றிட பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

**4)** ஜூலை **2024** மாதத்தில் பிறந்த நாள் காணும் இம்மாவட்ட ஓய்வூதியர்களுக்கு பொன்னாடை அணிவித்து பிறந்த நாள் கேக் வெட்டி அவர்களுக்கு பாராட்டும் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது.

**– கு.சக்கரபாணி**, மாவட்டத்தலைவர், பெரம்பலூர்


# வேலூர் மாவட்டத்தின் சார்பில் தானைத் தலைவர் அமரர் சிவ இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா














தமிழ்நாடு ஒய்வூதியர் சங்கம், வேலூர் மாவட்டத்தின் சார்பில், தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் 88 வது பிறந்த நாள் விழா மாவட்ட சங்க அலுவலகத்தில் **18.07.2024** வியாழக்கிழமை காலை **11** மணி அளவில், மாவட்டத்தலைவர் திரு பொன்.திருவெங்கடேசுவரன் தலைமையில் நடைபெற்றது. தானைத்தலைவர் படத்திற்கு கௌரவ ஆலோசகர் எஸ்.ராமநாதன் அவர்கள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து மாவட்டத்தலைவர் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் தானைத்தலைவரின் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர். மாவட்ட செயலாளர் வெ.ரமேஷ்குமார் வரவேற்புரை ஆற்றினார்.

தொடர்ந்து மாவட்ட தலைவர் திரு பொன் திருவெங்கடேசுவரன் மாநில பிரச்சார செயலாளர் என்.எஸ்.கருணாநிதி, கௌரவ ஆலோசகர் எஸ்.ராமநாதன் ஆகியோர் தானைத் தலைவருடன் இணைந்து பணியாற்றிய நினைவுகள், தானைத்தலைவரின் எளிமை, நேர்மை, உறுதியான தலைமை பண்பு, அவரது தலைமையில் அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் பெற்ற சலுகைகள், உரிமைகளை நினைவு கூர்ந்து சிறப்புரை ஆற்றினர். நிகழ்வில் மாவட்ட தணிக்கையாளர் பி.லெனின்குமார், மாவட்ட இணை செயலாளர் எல்.கிருஷ்ணன், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் எம்.குழந்தை வடிவேலு, மூத்த உறுப்பினர்கள் ஜெ.ஜெயவேலு மற்றும் அ.கெஜராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட பிரச்சார செயலாளர் பி.குணசேகரன் நன்றியுரை வழங்கினார்.

**– வெ.ரமேஷ்குமார்,**
மாவட்டச்செயலாளர், வேலூர்



கிருஷ்ணகிரி மாவட்ட இணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அலுவலகத்தில் நிர்வாக அலுவலராகப் பணியாற்றி ஒய்வு பெற்ற திரு.சந்திரசேகர் அவர்களுக்கு மாவட்டத்தலைவர் திரு.நாராயணன் அவர்கள் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.



கிருஷ்ணகிரி மாவட்ட கல்வி அலுவலகத்தில் கண்காணிப்பாளராகப் பணியாற்றி **30.06.2024** அன்று ஒய்வு பெற்ற திருமதி.தெய்வானை அவர்களுக்கு உடன் பணியாற்றிய சகோதரிகள் சிறப்பு செய்தனர்.

# தேனி மாவட்டத்தின் சார்பில் தானைத் தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா





தானைத்தவைலர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் **88** வது பிறந்த நாளான **18.07.2024** அன்று தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரை சுதந்திர வீதியிலுள்ள தமிழ்நாடு ஒய்வூதியர் சங்க மாவட்ட மைய அலுவலகத்தில் சங்கத்தின் சார்பாக அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தேனிமாவட்டத்தலைவர் திரு.எஸ்.சுப்பிரமணியன், மாவட்டச் செயலாளர் திரு.பி.காளிமுத்து, மாவட்டப் பொருளாளர் திரு.எம்..ஸ்டீபன், மாவட்ட அமைப்புச் செயலாளர் திரு.வி.பவானந்தம், ஆண்டிபட்டி வட்டக்கிளைத் தலைவர் திரு.எஸ். நாகராஜன், பெரியகுளம் வட்டக்கிளைத் துணைத்தலைவர் திரு.பி.சந்திரசேகரன், பெரியகுளம் வட்டக்கிளை செயலாளர் திரு.ஆர்.ஆறுமுகம், பெரியகுளம் வட்டக்கிளை இணைச் செயலர் திரு.எஸ்.கணேசன் ஆகியோர் திரு.சிவ.இளங்கோ அவர்களின் சேவைகளை எடுத்துக் கூறி அன்னாருக்கு ''புகழ் அஞ்சலி'' செலுத்தினர். வருகை தந்த நிர்வாகிகளுக்கு தேனி மாவட்ட செயலாளர் திரு.பி.காளிமுத்து அவர்களால் தேநீர் விருந்து வழங்கப்பட்டது.

| **எம்.ஸ்டீபன்** | **பெ.காளிமுத்து** | **ச.சுப்பிரமணியன்** |
|---|---|---|
| மா.பொருளாளர் | மா.செயலாளர் | மா.தலைவர் |

# காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டக்கிளையில் தானைத்தலைவரின் பிறந்த நாள் விழா







காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டக்கிளையின் சார்பில், தானைத்தவைலர் திரு.சிவ.இளங்கோ அவர்களின் **88** வது பிறந்த நாள் விழா வட்டக்கிளைத்தலைவர் திரு.எம்.தாமோதரன் தலைமையில் செயலாளர் திரு.வி.ரவிக்குமார், பொருளாளர் திரு.ஏ.கணபதி மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. திரளான உறுப்பினர்கள் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி சிறப்பு செய்தனர். விழா முடிவில் அனைவருக்கும், இனிப்பு, பிஸ்கட், தேநீர் வழங்கப்பட்டது.

**– எம்.தாமோதரன்,**
வட்டக்கிளைத்தலைவர், ஸ்ரீபெரும்புதூர்

# இரங்கல் செய்தி

தமிழ்நாடு ஒய்வூதியர் சங்கம், கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டக்கிளை தலைவர் திரு.ஜி.கிருஷ்ணன் அவர்களின் துணைவியார் திருமதி.சௌந்தரவள்ளி அவர்கள் **21.07.2024** அன்று இயற்கை எய்தினார். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**– கிருஷ்ணகிரி மாவட்ட மையம்**

# வேலூர் மாவட்ட ஜூலை மாத மாதாந்திரக் கூட்டம்











நமது சங்கத்தின் மாதாந்திர கூட்டம் வேலூர் கருணீகர் சங்க கட்டிடத்தில் மாவட்டத்தலைவர் திரு.பொன்.திருவெங்கடேசுவரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச்செயலாளர் திரு.வெ.ரமேஷ்குமார் வரவேற்புரை ஆற்றினார். தலைமை நிலையச்செயலாளர் திரு.சுப்பிரமணியன் சென்ற மாத நிகழ்வுகளின் அறிக்கையினை வாசித்து ஒப்புதல் பெற்றார். மாவட்டப் பொருளாளர் திரு.மோகன்தாஸ் அவர்கள் நிதிநிலை அறிக்கை வாசித்து ஒப்புதல் பெற்றார். மேலும், இந்த வருடம் (2024) சந்தா செலுத்தாதவர்கள் சந்தா செலுத்தும்படி கேட்டுக் கொண்டார். ஆலோசகர் திரு.இராமநாதன் அவர்கள், சங்கத்தின் உடனடி தேவைகளுக்கு நன்கொடையாக ரூ.3000/– வழங்கினார்.

மாவட்டத்தலைவர் தனது தலைமை உரையில், சி.எம்.சி. மருத்துவமனை தொடர்பான விபரங்கள் மற்றும் ராணிப்பேட்டை சி.எம்.சி. அரசு ஒப்புதல் அளித்திருப்பது, மஸ்டர் விபரங்கள், மாநில செயல்பாடுகள் குறித்த விபரங்களை தெரிவித்தார். துணைத்தலைவர் திரு.அரிகிருஷ்ணன் சிறப்பு ஊதியம் குறித்த மத்திய அரசின் நிலைப்பாடுகளை விவரித்தார். வட்டக்கிளைகள் சார்பாக காட்பாடி தலைவர் திரு.மாணிக்கவாசகம், குடியாத்தம் தலைவர் திரு.சின்னபையன், அணைகட்டு திரு.தங்கவேலு, காட்பாடி ஆலோசகர் திரு.வீரபத்திரன், மாநில பிரச்சார செயலாளர் திரு.கருணாநிதி ஆகியோர் கருத்துரை வழங்கினர். தொடர்ந்து பிரச்சாரச்செயலாளர் திரு.அமல்ராஜ் அவர்கள் பிறந்தநாள் விழா நடவடிக்கைகளை தொடங்கினார். பிறந்த நாள் விழா காணும் 85 வயது மூத்த உறுப்பினர் வேளாண்துறை கண்காணிப்பாளர் திருமதி சிவகாமு, கௌரவ ஆலோசகர் திரு.இராமநாதன், துணைத் தலைவர் திரு.வே. கலியபெருமாள் ஆகியோருக்கு பிறந்தநாள் கேக் வெட்டி விழா கொண்டாடப்பட்டது. கூட்டத்தில், நிர்வாகிகள் திரு.லெனின், திரு.கிருஷ்ணன், திரு.குணசேகரன், திருமதி.லட்சுமி, திருமதி.வனிதா, திருமதி.மலர்கொடி, திருமதி.உஷா, திருமதி.ரெஜினா மல்லிகாதேவி, திரு.மோகன்ராஜ், திரு.வில்வநாதன், காட்பாடி திரு.திருநாவுக்கரசு,, குடியாத்தம் திரு.முருகேசன் மற்றும் திரளான மகளிரும் கலந்து கொண்டனர்.

பின்னர் கௌரவ ஆலோசகர் திரு.இராமநாதன் அவர்கள் சிறப்பானதொரு சிறப்புரை ஆற்றினார். இறுதியாக மாவட்ட அமைப்புச்செயலாளர் திரு.இராமானுஜலு அவர்கள் நன்றிகூற கூட்டம் நிறைவுற்றது. வந்திருந்த அனைவருக்கும் பொது சுகாதாரத்துறை சமுதாய செவிலியர் திருமதி பேபி அவர்கள் மதிய உணவு விருந்தளித்தார்.

**– பொன். திருவெங்கடேசுவரன்,**
**மாவட்ட தலைவர், வேலூர்**

# கிருஷ்ணகிரி மாவட்ட பொதுக்குழு கூட்டம்











தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சார்பில், இரண்டு மாதங்களுக்கொரு முறை நடைபெறும் மாதாந்திர பொதுக்குழு கூட்டம், **29.6.2024** சனிக்கிழமை அன்று காலை **10** மணிக்கு கிருஷ்ணகிரி நகரம் புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தலைவர் திரு.நாராயணன் தலைமை தாங்கினார். மாவட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி.பேபி நளினி வரவேற்புரை ஆற்றினார். மாவட்டச்செயலாளர் திரு.ரமேஷ்குமார் கூட்ட அறிக்கை வாசித்தார். மாவட்டப்பொருளாளர் திரு.விஜயேந்திரன் வரவு–செலவு அறிக்கை வாசித்தார்.

முடிவில்,மாவட்டமகளிர் அணிதுணைச்செயலாளர் திருமதி.பத்மாவதி நன்றியுரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட சட்ட ஆலோசகர் திரு.குணசேகரன் தமது உரையில், ஓய்வூதியர் தொடர்பான நீதிமன்ற வழக்குகள், தீர்ப்புகள், வாரிசு நியமனம், குடும்ப சொத்து வில்லங்கங்கள் மற்றும் அதற்கான தீர்வுகள், உயில் சாசனம் தொடர்பான விளக்கங்கள் மற்றும் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கம் அளித்தும் சிறப்புரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் சுமார் **50** உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. புதிய உறுப்பினர் சேர்க்கை, ஓய்வூதியர் நண்பன் மாத இதழுக்கு சந்தா, மாநில சங்க கட்டிட நிதி, உறுப்பினர் சந்தா ஆகியவை வசூலிக்கப்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை திருவாளர்கள் ரியாஸ், அசோகன், நரசிம்மன், பன்னீர் செல்வம், குமரேசன் மற்றும் பலர் முன்னின்று சிறப்பாக செய்தனர்.

**– ஜி.ரமேஷ்குமார்,**
மாவட்ட செயலாளர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

# விழுப்புரம் மாவட்டத்தின் மாதாந்திரக் கூட்டம்











தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க விழுப்புரம் மாவட்டத்தின் மாதாந்திரக்கூட்டம் 13.07.2024 சனிக்கிழமை அன்று காலை 11 மணியளவில், விழுப்புரம் அரசு அலுவலர் ஒன்றிய கட்டிட வளாகத்தில், மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு.எஸ்.வின்செண்ட் டிபால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் இனிதே துவங்கியது.

மாவட்டச்செயலாளர் திரு.ஏ.குருசேகரன் அனைவரையும் வரவேற்று, சென்ற மாத செயல்களை அறிக்கையாக சமர்ப்பித்தார். இம்மாதம் பிறந்த நாள் காணும் நண்பர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும் இம்மாதம் சங்கத்தில் மூவர் புதிய உறுப்பினர்களாக இணைந்ததைத் தெரிவித்தார். இம்மாதம் கருவூலத்தில் நேர்காணலுக்கு செல்லாதவர்கள், செல்ல வேண்டியவர்கள் நேர்காணலுக்கு செல்ல அறிவுறுத்தினார்.

மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு.எஸ்.வின்செண்ட் டிபால் அவர்கள் தமது தலைமையுரையில், மாநிலச் செய்திகளை தெரிவித்தார். மேலும் இம்மாதம் பிறந்த நாள் காணும் அனைவருக்கும் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இம்மாதம் பிறந்த நாள் காணும் அனைவருக்கும் பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. மாவட்டப் பொருளாளர் திரு.ஆர்.அண்ணாமலை அவர்கள் மாத நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தார். தமிழ்நாடு ஓய்வூதியர் நண்பன் இதழுக்கு புரவலராகவும், மூன்றாண்டு சந்தாதாரராகவும் ஆக அனைவரையும் கேட்டுக் கொண்டும், பிறந்த நாள் காணும் உறுப்பினர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தும், மேலும் மாவட்ட கட்டிட நிதியை அளிக்கவும் கேட்டுக் கொண்டார்.

மாவட்ட மகளிர்அணி செயலாளர் திருமதி.ஏ.செல்வராணி, மாவட்ட அமைப்புச்செயலாளர் திரு.சா.அறிவழகன், மாவட்ட பிரச்சாரச்செயலாளர் திரு.வி.வாசுதேவன், இணைச்செயலாளர் திரு.பா.நாராயணசாமி, தணிக்கையாளர்கள் திரு.வி.நாகராஜன் மற்றும் மு.இராமச்சந்திரன், செயற்குழு உறுப்பினர் திரு.ஏ.நூர்அகமது, திண்டிவனம் வட்டக்கிளை பொருளாளர் திரு.பி.ராஜசேகர், மேனாள் மாவட்ட துணைத்தலைவர் திரு.தெ.ரெங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரையும், வாழ்த்துரையும் வழங்கினர். கூட்டத்தில் உறுப்பினர்கள் பலர் பங்கேற்றனர். இறுதியில் தணிக்கையாளர் திரு.மு.இராமச்சந்திரன் நன்றி நவில நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. கூட்டத்திற்கு வந்த அனைவருக்கும் இம்மாதம் பிறந்த நாள் காணும் நண்பர்கள் தேநீர்

விருந்து அளித்து உபசரித்தனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**1)** 65 வயது நிறைவு செய்த ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 5 சதவீதம் கூடுதல் ஓய்வூதியமும், 70 வயது நிறைவு செய்தவர்களுக்கு 10 சதவீதம் கூடுதல் ஓய்வூதியமும், 75 வயது நிறைவு செய்தவர்களுக்கு 15 சதவீதம் கூடுதல் ஓய்வூதியமும், 80 வயது நிறைவு செய்தவர்களுக்கு வழக்கம் போல் 20 சதவீதம் கூடுதல் ஓய்வூதியமும் வழங்க அரசை வலியுறுத்தி பெற்றுத்தர மாநில சங்கத்தை கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**2)** தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத் தலைவராக 23 ஆண்டுகள் செயல்பட்ட தானைத்தலைவர் அமரர்.சிவ.இளங்கோ அவர்கள் 88வது பிறந்த நாளை 18.07.2024 அன்று கொண்டாடுவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

– **அ.குருசேகரன்,** மாவட்டச்செயலாளர், விழுப்புரம்

# சேலம் மாவட்டத்தின் மாதாந்திரக் கூட்டம்





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், சேலம் மாவட்டத்தின் மாதாந்திரக்கூட்டம் மாவட்டத்தலைவர் ஆர்.இரகுபதி தலைமையில், 09.07.2024, செவ்வாய்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் சேலம் சபாநாயகம் கட்டிடத்தில் உள்ள அரசு அலுவலர் ஒன்றிய கட்டிடத்தில் உள்ள சிவ.இளங்கோ கூட்ட அரங்கில் நடைபெற்றது. மாவட்ட துணைத்தலைவர் திரு.விஜயகுமரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்டத் தலைவர் ஆர்.இரகுபதி முன்னுரையாற்றினார். ஆக்கப்பூர்வமான இக்கூட்டத்தில், மாநில துணைத் தலைவர் ஆர்.ராகவன், மாநில துணைப்பொதுச்செயலாளர் கோ. சண்முகசுந்தரம், மாவட்டத் துணைத்தலைவர்களான ஜெ.ஜெகநாதன், கே.நடராஜன், இணைச்செயலாளர் எஸ்.வி.கோவிந்தராஜன் உள்ளிட்டு மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சங்கத்தின் முன்னோடி உறுப்பினர்கள் அ.அருள்சாமி, கே.அமிர்தலிங்கம், எம்.மகாவிஷ்ணு, ஜெகதீசன், அயோத்தி மகளிர் அணி சார்பில், மூத்த சகோதரிகள் ஜானகி, அமுதவல்லி, புதிய மகளிர் உறுப்பினர்கள் உள்ளிட்டு ஏறத்தாழ 65 நபர்களுக்கு மேல் கலந்து கொண்டு கீழ்க்கண்ட தீர்மானத்தின் மீது கருத்து தெரிவித்து உரையாற்றினார்கள்.

**1)** 2024ஆம் ஆண்டின் உறுப்பினர்கள் மற்றும் புரவலர்களை அதிகப்படியான அளவில் சேர்த்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**2)** நிலுவையில் உள்ள கோரிக்கைகள் சம்மந்தமாக மாநில மையம் போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**3)** ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களின் நீண்டகால வாழ்வாதார 10 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக அரசின் கவனத்தை ஈர்த்திடும் வகையில், மாநிலம் தழுவிய கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்திட ஆவன செய்திடுமாறு மாநில மையத்தை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இறுதியாக மாவட்டப் பொருளாளர் ஆர்.தனபால் நன்றி கூறிட, கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| **ஆர்.இரகுபதி** | **ஆர்.ராகவன்** |
| மாவட்டத்தலைவர் | மாநில துணைத்தலைவர் |

# பிறந்த நாள் விழா

வேலூர் மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தலைவர் திரு.பொன்.திருவெங்கடேசுவரன் அவர்களை, முன்னாள் மருத்துவத்துறை அலுவலர், ஆற்காடு திரு.தினமணி அவர்கள் சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார்.



# தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், இராணிப்பேட்டை மாவட்டம்

## நிர்வாகிகள் தேர்தல் – 2024 முதல் 2027 முடிய

### தேர்தல் ஆணையர்களின் நடவடிக்கைகள்


**முன்னிலை :**



திரு. என்.எஸ்.கருணாநிதி, மாநில பிரச்சாரச்செயலாளர்/தேர்தல் ஆணையர்

பொருள்: தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், இராணிப்பேட்டை மாவட்டம் – நிர்வாகிகள் தேர்தல் முடிவுகள் – ஆணை வழங்குதல் – குறித்து.

பார்வை : தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க மாநில மையம், சென்னை கடித எண்.26/2024, நாள். .05.2024

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகிகள் தேர்வு செய்து கீழ்க்கண்டவாறு அவரவர் பெயர்களுக்கெதிரே குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு போட்டியின்றி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று இதன்பொருட்டு ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் (ம) முகவரி | பதவி | புகைப்படம் |
|---|---|---|---|
| 1 | **திரு.பி.பாலசுந்தரம்**<br>கால்நடை பராமரிப்புத்துறை<br>நெ.34/33 மாரியம்மன் கோவில் தெரு,<br>இராணிப்பேட்டை–632404<br>செல் : 9952561425 | மாவட்டத்தலைவர் |  |
| 2 | **திரு.வி.ஜெயவேலு, வணிகவரித்துறை**<br>நெ.29/16, சங்கம் தெரு,<br>நவல்பூர்<br>இராணிப்பேட்டை–632401<br>செல் : 9442574214 | மாவட்ட<br>துணைத்தலைவர் |  |
| 3 | **திரு.பி.சுப்பிரமணி, காவல் துறை**<br>நெ.1/98பி, பிள்ளையார் கோவில் தெரு,<br>வி.சி. மோட்டூர், வாலாஜா<br>இராணிப்பேட்டை–632513<br>செல் : 9791516860 | மாவட்ட<br>துணைத்தலைவர் |  |
| 4 | **திரு.எஸ்.கருணாகரன்**<br>கருவூலக் கணக்குத்துறை<br>நெ.16, வடக்கு புதுத்தெரு,<br>அம்மூர் கிராமம்,<br>இராணிப்பேட்டை–632401<br>செல் : 9442342405 | மாவட்ட<br>துணைத்தலைவர் |  |
| 5 | **திரு.ஏ.ஷாக்கீர்ஜான், கல்வித்துறை**<br>நெ.15பி, மசூதி தெரு, கிரேட் நகர்,<br>நவல்பூர்,<br>இராணிப்பேட்டை–632401<br>செல் : 8754821999 | மாவட்டச்செயலாளர் |  |
| 6 | **திரு.ஜி.வஜ்ஜிரம், விவசாயத்துறை**<br>நெ.9, ஆற்காடு தெத்து தெரு,<br>2 வது, வாலாசா,<br>இராணிப்பேட்டை–632513<br>செல் : 9444054565 | மாவட்ட பொருளாளர் |  |
| 7 | **திரு.ஆர்.குணசேகரன், நீதித்துறை**<br>நெ.5/சி, நேரு நகர்,<br>காரை–அஞ்சல்,<br>இராணிப்பேட்டை–632404<br>செல் : 9751233640 | அமைப்புச்செயலாளர் |  |

| | | | |
|---|---|---|---|
| 8 | **திரு.எஸ்.தனபால், காவல் துறை**<br>நெ.292, விவேகானந்தர் நகர்<br>கீழ்புதுப்பேட்டை, வாலாஜா<br>இராணிப்பேட்டை–632513<br>செல் : 9994076679 | பிரச்சாரச் செயலாளர் |  |
| 9 | **திரு.எஸ்.நாராயணசாமி**<br>கால்நடை பராமரிப்புத்துறை<br>நெ.11/14, காந்தி நகர்,<br>மாந்தாங்கல்–அஞ்சல்<br>இராணிப்பேட்டை–632404<br>செல் : 9597768816 | இணைச் செயலாளர் |  |
| 10 | **திரு.எம்.ஜனார்த்தனம்**<br>வருவாய்த்துறை<br>நெ.5, வள்ளலார் தெரு, பெல்லியப்பா நகர்<br>வாலாஜா, இராணிப்பேட்டை–632513<br>செல் : 9092843685 | இணைச் செயலாளர் |  |
| 11 | **திரு.எம்.சுந்தர்ராஜன்**<br>வேலை வாய்ப்பு பயிற்சித்துறை<br>சர்ச் தெரு, நரசிங்கபுரம் கிராமம், பெல் (PO)<br>இராணிப்பேட்டை–632404<br>செல் : 9944206073 | இணைச் செயலாளர் |  |
| 12 | **திரு.ஏ.சதக்கத்துல்லா**<br>மருத்துவத்துறை<br>நெ.14, தொட்டிசபான் தெரு,<br>வாலாஜா, இராணிப்பேட்டை–632513<br>செல் : 8870630031 | இணைச் செயலாளர் |  |
| 13 | **திரு.எஸ்.விஜயரங்கம்**<br>நீதித்துறை<br>நெ.12/சி/34/பி, காட்டன் பஜார் தெரு,<br>பர்மா காலனி, காரை,<br>இராணிப்பேட்டை–632404<br>செல் : 9791516860 | இணைச் செயலாளர் |  |
| 14 | **திரு.என்.ஞானசேகரன்**<br>காவல் துறை<br>நெ.50, 4வது குறுக்குத்தெரு,<br>த.நா.வீ.வ.வாரியம், வாலாஜா,<br>இராணிப்பேட்டை–632513<br>செல் : 9444811814 | மத்திய செயற்குழு<br>உறுப்பினர் |  |
| 15 | **திருமதி.தமிழ்கொடி**<br>சமூக நலத்துறை<br>எஸ்.ஆர்.பி.காலனி, பாரதி நகர், சிப்காட்<br>இராணிப்பேட்டை<br>செல் : 9626721741 | மகளிர்அணி செயலாளர் | |

ஆகவே, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் 2024ஆம் ஆண்டு முதல் 2027 முடிய மூன்றாண்டுகள் வரையிலும் அல்லது அடுத்த தேர்தல் நடைபெறும் வரையிலும் பதவி வகிப்பார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. இந்த ஆணை உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

**என்.எஸ்.கருணாநிதி**
மாநில பிரச்சாரச்செயலாளர் / தேர்தல் ஆணையர்

பெறுநர்
சம்பந்தப்பட்ட அனைவரும்

# திருவள்ளூர் மாவட்டக் கூட்டம்

தமிழ்நாடு ஒய்வூதியர் சங்க திருவள்ளூர் மாவட்ட கூட்டம் 08.06.2024 அன்று மாவட்ட தலைமை அலுவலகத்தில், மாவட்டத்தலைவர் திரு.லோ.கோட்டீஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்டச்செயலாளர் திரு.கே.தனசேகரன், பொபது, மாவட்ட துணைத்தலைவர் திரு.ஜி.ரவி, மாவட்டப் பொருளாளர் திரு.த.ஜெயச்சந்திரன், திரு.பி.இ. சேகர், திரு.ஜெ.காணிக்கராஜு, ஆவடி வட்டக்கிளைத்தலைவர் திரு.டி.அம்பிகைபாலன், திரு.எம்.கண்ணன், திரு.சச்சிதானந்தம், மாவட்ட துணைத்தலைவர் திரு.என்.கோபாலகிருஷ்ணன், மாவட்ட துணைத்தலைவர் திருமதி.விஜய சாமூண்டீஸ்வரி, திரு.வேலுச்சாமி, திரு.அச்சுதன், திரு.ஜெயவீரன், மகளிரணி துணை அமைப்பாளர் திருமதி.டி.மல்லிகா மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் 8 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியாக மாவட்டப் பொருளாளர் திரு.த.ஜெயச்சந்திரன் அவர்கள் நன்றியுரையாற்றினார். பின்னர் கூட்டம் முடிவுற்றது.

தீர்மானங்கள்

1) மாவட்ட சங்க முன்னாள் துணைச்செயலாளர் திரு.ஏ.டி.குலோத்துங்கன் (மருத்துவத்துறை) அவர்கள், 30.05.2024 அன்று காலமானார். அன்னாருக்கு மாவட்ட சங்கத்தின் சார்பாக அஞ்சலி செலுத்தப்பட்டது. அன்னாரின் மறைவுக்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

2) தமிழ்நாடு அரசு ஒய்வூதியர்கள் மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனைகளில் மருத்துவம் செய்து கொள்ள அனுமதி வழங்கி அரசாணை வழங்கியுள்ள அரசுக்கு மாவட்ட நிர்வாகம் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

3) மாவட்ட நிர்வாகிகள் முயற்சி எடுத்து திருவள்ளூர் மாவட்ட உறுப்பினர்களை சேர்க்கவும், புரவலர்களை புதிதாக சேர்க்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4) அரசு ஒய்வூதியர்களிடமிருந்து மாதம் ரூ.497/– வீதம் காப்பீடு திட்டத்தில் பிடித்தம் செய்யப்படுகிறது. அந்த காப்பீடு திட்டத்தில் அறுவை சிகிச்சைக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மருத்துவம் செய்து கொள்ள காப்பீடு திட்டத்தில் வாய்ப்பு இல்லை. இது பெருவாரியான காப்பீடு திட்டத்தில் இணைந்துள்ள ஒய்வூதியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். இந்த நிலைமையினை மாற்றி அனைத்து மருத்துவமனைகளிலும் காப்பீடு திட்டத்தில் இணைந்துள்ள மாதம் ரூ.497/– செலுத்தும் ஒய்வூதியர்களுக்கும் மாற்றி அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்த வேண்டுமென மாநில மையத்தை இக்கூட்டம் ஒருமனதாக கேட்டுக் கொள்கிறது.

5) நீண்டகாலமாக அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஒய்வூதியம் ரூ.2000/– என்பதனை மாற்றி குறைந்தபட்ச ஒய்வூதியமாக ரூ.7850/– என மாற்றி வழங்கிட அரசை வலியுறுத்த வேண்டுமென மாநில மையத்தை இக்கூட்டம் ஒருமனதாக கேட்டுக் கொள்கிறது.

6) அரசால் வழங்கும் ஒய்வூதியர்களுக்கான ஒய்வூதிய அடையாள அட்டை இதுநாள் வரை பெறப்படவில்லை. இதனை அரசிடமிருந்து பெற்று வழங்கிட இம்மாவட்ட மையம், மாநில மையத்தினை ஒருமனதாக கேட்டுக் கொள்கிறது.

7) அரசால் வழங்கும் அரசு மருத்துவக் காப்பீட்டு அட்டை மாவட்ட கருவூல அலுவலகத்தால் 2022–2026க்கான அடையாள அட்டை வழங்கப்படவில்லை. எனவே மேற்காணும் காப்பீட்டு அடையாள அட்டையினை அரசிடமிருந்து ஒய்வூதியர்களுக்கு பெற்றுத்தர வேண்டுமாய் இம்மாவட்ட மையம், மாநில மையத்தினை ஒருமனதாக கேட்டுக் கொள்கிறது.

8) இம்மாவட்ட மையத்தில் உள்ள மாநில நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களிடமிருந்து மாநில மையத்திற்கு கட்டிட நிதி பெற்றுத்தர வேண்டி இம்மாவட்ட நிர்வாகிகளை கேட்டுக் கொள்கிறது.

**– லோ.கோட்டீஸ்வரன்,**
மாவட்டத்தலைவர், திருவள்ளூர்




தானைத் தலைவர்
சிவ இளங்கோ அவர்களின்
88வது பிறந்தநாள் விழா
மாவட்ட அலுவலகத்தில்
நடைபெற்றது.

**லோ.கோட்டீஸ்வரன்,**
மாவட்டத்தலைவர்,
திருவள்ளூர்

# திருவள்ளூர் மாவட்ட மாதாந்திரக் கூட்டம்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க திருவள்ளூர் மாவட்ட கூட்டம் 13.07.2024 சனிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில், மாவட்டத்தலைவர் திரு.லோ.கோட்டீஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தானைத்தலைவர் சிவ.இளங்கோ அவர்களின் பிறந்த நாளான 18.07.2024 அன்று சிறப்பாக கொண்டாடுவதென முடிவெடுக்கப்பட்டது.

மேலும், எதிர்வரும் 08.09.2024 அன்று நடைபெறவுள்ள 6வது மாவட்ட பொதுக்குழு கூட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யும் வகையில் தனித்தனி குழுக்கள் அமைக்கப்பட்டு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

6வது மாவட்ட பொதுக்குழு சிறப்பாக அமைந்திட அனைத்து மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் தொய்வின்றி செயல்பட முடிவெடுக்கப்பட்டது.

மேலும், தீர்மானங்கள் விவாதித்து ஏற்பு செய்யப்பட்டன. கூட்டத்தில், மாவட்டச்செயலாளர் திரு.கே.தனசேகரன், மாவட்ட துணைத்தலைவர் திரு.ஜி.ரவி, மாவட்டப் பொருளாளர் திரு.த.ஜெயச்சந்திரன், மாவட்ட அமைப்புச் செயலாளர் திரு.என்.கோபாலகிருஷ்ணன், மாவட்ட துணைத்தலைவர் திருமதி.விஜய சாமூண்டீஸ்வரி, மாவட்ட துணைத்தலைவர் திரு.சி.கலியமூர்த்தி, மாவட்ட துணைச்செயலாளர் திரு.பெ.சிவபாதம், உறுப்பினர்கள் திருமதி. கே.இராஜம், திரு.பி.இ.சேகர், துணைத்தலைவர் திரு.ஜெ.காணிக்கராஜு, திரு.டி.ஜி.பாலச்சந்திரன், பிரச்சாரச்செயலாளர், திரு.எஸ்.அச்சுதன், திரு.கே.பாபு, திரு.கே.சிவக்குமார், திரு.பி.தேவமனோகரன், திரு.கே.தங்கவேலு, திரு.எஸ்.தணிகைவேலு, திரு.எம்.கண்ணன், திரு.எஸ்.வேலுச்சாமி, திரு.ஜி.சண்முகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்டப் பொருளாளர் திரு.த.ஜெயச்சந்திரன் அவர்கள் நன்றி கூறினார்.

**தீர்மானங்கள்**

1) மாவட்ட செயற்குழு உறுப்பினர்களாக ஜெ.தங்கவேலு, பொதுப்பணித்துறை, பி.இ.சேகர், வேளாண்துறை, டி.அண்ணாதுரை, மருத்துவத்துறை, ஏ.ஆர்.செல்லக்குட்டி, மருத்துவத்துறை, ஜி.சண்முகம், வனத்துறை, ஏ.ஜெயவீரன், பொதுப்பணித்துறை, கே.ராஜம் வேளாண்துறை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

2) கடந்த மாதம் பிப்ரவரி மாத மாதாந்திரக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, சம்பந்தப்பட்ட தொடர் கூட்டங்களில் கலந்து கொள்ளாத மாவட்ட பொறுப்பாளர்களுக்கு விளக்கம் கோரி அனுப்பப்பட்ட கடிதத்தின் நடவடிக்கையினை நிறுத்தி வைக்க ஆகஸ்ட் 2024 வரை வாய்ப்பு வழங்குவது என இக்கூட்டம் ஒருமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

3) செப்டம்பர் மாதம் 8ந்தேதி நடைபெறவுள்ள 6வது மாவட்ட பொதுக்குழுவுக்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதற்காக நிதிக்குழு, வரவேற்புக்குழு, மேடைக்குழு, உபசரிப்புக்குழு, பிரச்சாரக்குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்டன.

4) மாநில சங்க சுற்றறிக்கையின்படி, கட்டிட நிதியினை ஏற்கனவே மாவட்ட சங்கம் அவரவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, இலக்கை பூர்த்தி செய்யும் வகையில் தொகை வசூலிக்க அறிவுறுத்தப்பட்டது. இதில் காலதாமதமின்றி தொகை வழங்கிட கேட்டுக் கொள்ளப்பட்டது.

5) மருத்துவப்படியை மாதம் ரூ.1000/– வழங்க அரசை வேண்டுவது.

6) 85 வயது முடிந்த ஓய்வூதியர்களுக்கு பாராட்டு தெரிவித்து பொன்னாடை அணிவித்தல்.

7) 03.05.2024 அன்று மறைந்த ஏ.சுடலையாண்டி அவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

– லோ.கோட்டீஸ்வரன்,
மாவட்டத்தலைவர், திருவள்ளூர்

# இயற்கை எய்தினார்



திருப்பத்தூர் மாவட்ட ஓய்வூதியர் சங்க உறுப்பினரும்,
வருவாய்த்துறையில் தாசில்தாராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான
திரு.பி.டி.இராமச்சந்திர இராமானுஜதாசன் அவர்கள்
23.07.2024 அன்று இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன்
தெரிவித்துக் கொள்கிறோம்.

# காட்பாடி வட்டக்கிளையின் சார்பில் தானைத் தலைவர் பிறந்த நாள் விழா











தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், காட்பாடி வட்டக்கிளையின் 3 மாதத்திற்கு ஒருமுறை நடைபெறும் கூட்டமும், தானைத்தலைவர் சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் நிகழ்ச்சியும் சேர்த்து, காட்பாடி காந்தி நகர், பிரம்ம ஞான சங்கக் கட்டிடத்தில், 20.07.2024 சனிக்கிழமை அன்று காலை 10.45 மணியளவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வட்டக்கிளைத்தலைவர் க.மாணிக்கவாசகம் தலைமை தாங்கி, தனது தலைமையுரையில், கோரிக்கைகள் மற்றும் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் சங்க செயல்பாடுகள், கோரிக்கைகளை நிறைவேற்றிய விதம் குறித்து விரிவாக விளக்கினார். வட்டக்கிளைச் செயலாளர் சீராளன் வரவேற்புரையாற்றினார். வட்டக்கிளை பொருளாளர் கேசவன் வரவு–செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். வட்டக்கிளை அமைப்புச் செயலாளர் வேல்வீரன் அறிக்கையை வாசித்தார். காட்பாடி வட்டக்கிளையின் 2024–2027ம் ஆண்டுக்கான தேர்தலில் (16.03.2024) தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். கூட்டத்தில் பங்கேற்ற மாநில, மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகளுக்கும் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

கூட்டத்தில், மாவட்ட கௌரவ ஆலோசகர் ராமநாதன் கோரிக்கைகள் குறித்தும், அமரர் சிவ.இளங்கோ அவர்களின் சங்கப் பணிகள் குறித்தும் விரிவாக தெரிவித்து உரையாற்றினார். மேலும், மாநில பிரச்சாரச் செயலாளர் என்.எஸ்.கருணாநிதி, மாவட்டத்தலைவர் பொன்.திருவெங்கடேசுவரன் மாவட்டச் செயலாளர் வெ.ரமேஷ்குமார், மாவட்ட கௌரவ ஆலோசகர் ஜெயகுமார், மாவட்ட துணைத்தலைவர் ஹரிகிருஷ்ணன், மாவட்ட பிரச்சாரச்செயலாளர் அமல்ராஜ், மாவட்ட தலைமை நிலையச்செயலாளர் சுப்பிரமணியன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் லட்சுமி, காட்பாடி வட்டக்கிளை துணைத்தலைவர் சீனிவாச வரதன், காட்பாடி வட்டக்கிளை கௌரவ ஆலோசகர் வீரபத்திரன், மகளிர் அணி செயலாளர் கௌசல்யா, குடியாத்தம் வட்டக்கிளை தலைவர் சின்னப்பையன், அணைக்கட்டு வட்டக்கிளைத்தலைவர் மாணிக்கம், செயலாளர் கதிர்வேல் மற்றும் உறுப்பினர் அண்ணாமலை (பொதுப்பணித்துறை) ஆகியோர் கோரிக்கைகள் மற்றும் தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் புகழ் குறித்தும் விரிவாக உரையாற்றினார்கள்.

முடிவில் வட்டக்கிளை பிரச்சாரச்செயலாளர் சந்திரசேகரன் நன்றி கூற தேசிய கீதத்துடன் கூட்டம் நிறைவுற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட நிர்வாகிகள் கிருஷ்ணன், ராமானுஜலு, லெனின், காட்பாடி வட்டக்கிளை துணைத்தலைவர் திருநாவுக்கரசு மற்றும் மகளிர் 10 பேர் உட்பட 70க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். வட்டக்கிளை அமைப்புச்செயலாளர் வேல்வீரன் அவர்கள் தலைமையில் வட்டக்கிளை மகளிர் அணி செயலாளர் கௌசல்யா, மாவட்ட மகளிர் அணி செயலாளர் லட்சுமி ஆகியோர் மதிய உணவு ஏற்பாடுகளை சிறப்பாக செய்தனர்.

– **க.மாணிக்கவாசகம்,**
தலைவர், காட்பாடி வட்டக்கிளை

# விழுப்புரம் மாவட்டத்தின் சார்பில் தானைத் தலைவர் அமரர் சிவ இளங்கோ அவர்களின் பிறந்த நாள் விழா








அரசு அலுவலர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு எண்ணிலடங்கா சலுகைகளை பெற்றுத்தந்த தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மேனாள் தலைவர், தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா, தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க விழுப்புரம் மாவட்டத்தின் சார்பில், 18.07.2024 அன்று காலை 11 மணியளவில், மாவட்டத்தலைவர் திரு.து.புருஷோத்தமன் அவர்கள் தலைமையில், விழுப்புரம் அரசு அலுவலர் ஒன்றிய கட்டிட வளாகத்தில் நடைபெற்றது.

மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு.எஸ்.வின்சென்ட் டி பால், மாவட்டச்செயலாளர் திரு.ஏ.குருசேகரன், மாவட்ட இணைச்செயலாளர் திரு.பா.நாராயணசாமி, தணிக்கையாளர் திரு.வெ.நாகராஜன், செயற்குழு உறுப்பினர்கள் திரு.ஜி.நடராஜன், திரு.கே.ராஜேந்திரகுப்தா மற்றும் பொது சுகாதாரத்துறை ஆர்.பாரிவள்ளல், பொது சுகாதாரத்துறை அலுவலர் சங்க மாவட்டத்தலைவர் திரு.கே.ராஜாராமன் ஆகியோர் கலந்து கொண்டு தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தினர். தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

**– அ.குருசேகரன்,**
மாவட்டச் செயலாளர், விழுப்புரம்

# பணிநிறைவு பாராட்டு விழா

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், திருப்பூர் மாவட்ட சங்கத்தில் புதிதாக இணைந்த பட்டு வளர்ச்சித்துறையைச் சேர்ந்த ஆய்வாளர் திரு.என்.சந்திரன் அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா, பட்டு வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் சார்பாக, 04.07.2024 அன்று கோவையில், தாமஸ் கிளப் வளாகத்தில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் சார்பில், திருப்பூர் மாவட்டத் தலைவர் திரு.அ.சென்னியப்பன், மாவட்ட துணைத்தலைவர் திரு.க.சுப்பிரமணியன், திருப்பூர் மாவட்ட மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.இரா.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சால்வை அணிவித்து நினைவு பரிசு வழங்கி, வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



**– அ.சென்னியப்பன்**, மாவட்டத்தலைவர், திருப்பூர்

# செங்கல்பட்டு மாவட்டத்தின் சார்பில் முப்பெரும் விழா











தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க செங்கல்பட்டு மாவட்டத்தின் சார்பில், மாவட்ட பொதுக்குழு கூட்டம், தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா மற்றும் பணிநிறைவு பெற்றுள்ள சங்கத்தின் மாவட்ட பிரச்சாரச் செயலாளர் புரவலர் திரு.ஒய்.வெங்கடகிருஷ்ணன் (C Y R T/ Medical Department) அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா, 20.07.2024, சனிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில், செங்கல்பட்டு சி.எஸ்.ஐ. தூய கொலம்பா மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. மாவட்டத்தலைவர் திரு.Dr.M.ஜேம்ஸ் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, மாவட்டப் பொருளாளர் திரு.சா.இளங்கோவன், மாவட்டச்செயலாளர் திரு.வி.மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட துணைத்தலைவர் திரு.ச.இராஜசேகரன் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன் அவர்கள் தனது சிறப்புரையில், அவர் பணியில் சேர்ந்தபோது, மேல் அலுவலர்கள் கொடுத்த தொல்லைகளினால் பாதிக்கப்பட்டதும், இது சம்மந்தமாக தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்கள் எடுத்த நிலையான முடிவு, இதன் பின்னர் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்திற்கு விசுவாசமுள்ளவராக தன்னை மாற்றிக் கொண்டது, ஓய்வு பெற்றதும் இன்று மாநிலத்தலைவராக பொறுப்பு வகித்ததும், நமது சங்கத்திற்கு என்று வண்டலூரில் ரூ.50 லட்சத்திற்கு இடம் வாங்கியது பெருமைக்குரியதாகும் என்று பல்வேறு விவரங்களை தெரிவித்தார்.

மாநில தலைமை நிலையச்செயலாளர் திரு.என்.பக்தவச்சலம், மாநில துணைப்பொதுச் செயலாளர் திரு.டி.ஆர்.அன்னியப்பன், மாநில துணைத்தலைவர் திரு.வி.ஆறுமுகம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய செங்கல்பட்டு மாவட்டச்செயலாளர் திருமதி.ப.கவிதா, காஞ்சிபுரம் மாவட்டச்செயலாளர் திரு.கே.எஸ்.சுந்தரமூர்த்தி, சென்னை மாவட்டச் செயலாளர் திரு.ஆர்.ரவிச்சந்திரநாத் பாபு, சென்னை மாவட்டப் பொருளாளர் திரு.ஏ.விமலநாதன், மாவட்ட துணைத்தலைவர் திரு.கே.ஸ்ரீதரன், செங்கல்பட்டு வட்டக்கிளைப் பொருளாளர் திருமதி. மல்லிகா, தாம்பரம் வட்டக்கிளைச் செயலாளர் திரு.என்.ரெங்கநாதன், அம்பத்தூர் வட்டக்கிளை துணைத்தலைவர் திரு.சுப்பிரமணி, அம்பத்தூர் வட்டக்கிளை செயலாளர் திரு.ஆர்.பாலகிருஷ்ணன், நீதித்துறை திரு.துரைராஜ், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கல்வி விடுதிப் பணியாளர் சங்க மாநிலத்தலைவர் மற்றும் மாவட்டத்தலைவர் திரு.கு.சந்திரன், மாவட்டச்செயலாளர் திரு.மாதவன், மாவட்டப் பொருளாளர் திரு.கே.சி.ஆரோக்கியராஜ் ஆகியோர் கலந்து கொண்டு ஓய்வூதியர் சங்க

நிர்வாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து சிறப்பித்தனர். இறுதியில் திருமதி.கே.பி.சித்ராதேவி நன்றியுரையாற்றினார்.

இக்கூட்டத்திற்கு, சென்னை கொளத்தூர் சக்ரா கிரிடிக்கல் கேர் சென்டர் (ம) மருத்துவமனை பணியாளர்களான செயல் இயக்குநர் திருமதி. எஸ்தர் எவாஞ்சலின், தலைமை செயல் அலுவலர் திரு.ஜெயபால், ஹெல்த் கேர் மேலாளர் திருமதி.ஜனனி மற்றும் செல்வி.பிரியங்கா, திரு.அருண் ஆகியோர், அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு ஒரு இனிமையான செய்தி சக்ரா கிரிடிக்கல் கேர் சென்டர் (ம) மருத்துவமனை மருத்துவ காப்பீட்டுத் திட்டம் மூலம் கட்டணமில்லா மருத்துவம் சிறப்பான முறையில் செய்து கொண்டு வருகிறது என்பதை அழகாக எடுத்துரைத்தனர்.

– டாக்டர் ஆ.ஜேம்ஸ் பாலகிருஷ்ணன்,
மாவட்டத்தலைவர்

# ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் அதிக ஓய்வூதியம் பெற அரிய வாய்ப்பு

ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் பெறும் ஓய்வூதியத் தொகையில் அதிக அளவில் குறைபாடுகள் மற்றும் விடுதல்கள் உள்ளன. எனது வேண்டுகோளின்படி, 31.03.2024 வரை பெறப்பட்ட 10152 பென்சன் புத்தக நகல்களை சரிபார்த்ததில், 4018 ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு குறைவாக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவது கண்டறியப்பட்டு, அவர்களுக்கு உரிய அதிக ஓய்வூதியமும், ஓய்வூதிய நிலுவைத்தொகையும் பெற விண்ணப்பங்கள் தயார் செய்து அளித்து பயன் பெற்றுள்ளனர். 6134 ஓய்வூதியர்களுக்கு சரியான வீதத்தில் ஓய்வூதியம் வழங்கப்படும் விபரம் தெரிவிக்கப்பட்டது.

கருவூலம் தானாகவே முன்வந்து குறைவாக ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியங்களை உயர்த்தி வழங்குவதில்லை. அதிக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெற ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் உரிய விண்ணப்பங்களை அளித்தால்தான், கருவூலத்தில் உரிய அதிக ஓய்வூதியம் வழங்குவார்கள். தமிழ்நாடு மாநிலம் முழுவதும் பெரும்பாலான ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் அதிக ஓய்வூதியம் பெற உரிய விண்ணப்பங்களை கருவூலத்தில் அளிக்கவில்லை. இதனால் தொடர்ந்து குறைவான ஓய்வூதியமே பெற்று வருகிறார்கள். எனவே, ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் தற்பொழுது பெற்றுவரும் ஓய்வூதியத் தொகை சரிதானா ? என்று சரிபார்த்துக் கொள்வது அவசியமாகிறது. ஓய்வூதிய புத்தக சரிபார்ப்பு இலவசம் ஆகும்.

ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் தமது பென்சன் புத்தக நகல் மற்றும் வங்கி பாஸ் புத்தக முதல் பக்க நகலினை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்து, அதிக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத்தொகையை பெற்று பயன்பெறும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**திரு.ஆர்.சபாபதி**
M.A..M.Com.,M.B.A.,B.G.L.,D.L.L.A.L.,D.CA.C.J.,

கருவூலத் துறை இணை இயக்குநர் (ஓய்வு).
எண்:1, முதல் தெரு, மு.ஆ.மு. நகர்,
தலத்தெரு அஞ்சல்,
காரைக்கால் மாவட்டம் – 609605
அலைபேசி எண்கள் : 96556 18699, 94861 16037

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



சென்னை மாவட்ட துணைச்செயலாளர் திரு.பி.நாராயணன் அவர்களின் மாமியார் திருமதி. வி எஸ் சுலோச்சனா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி 05.08.2024 நடைபெற உள்ளது.

சென்னை மாவட்ட உறுப்பினரும், அங்கன்வாடியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவருமான திருமதி.ஏ.ஜெய் புனிஷா அவர்கள், 07.07.2024 அன்று இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



# திருப்பூர் மாவட்டத்தின் சார்பில் தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் பிறந்த நாள் விழா





தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத்தலைவராக ஏறக்குறைய 25 ஆண்டுகாலம் தன்னலமற்று பணியாற்றியவரும், அரசு ஊழியர்களே தம் வாழ்வாக வாழ்ந்தவருமான தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க அவிநாசி அலுவலகத்தில், 18.07.2024 அன்று காலை 10 மணியளவில், அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், மாவட்டத் தலைவர் அ.சென்னியப்பன், மாவட்டச்செயலாளர் செ.அந்தோணிசாமி, மாநில மகளிரணி அமைப்பாளர் கி.ரெங்கநாயகி, மாவட்ட துணைத்தலைவர் க.சுப்பிரமணியன், அவிநாசி வட்டக்கிளைத்தலைவர் பொ.சோமசுந்தரம், மத்திய செயற்குழு உறுப்பினர் இரா.பன்னீர்செல்வம், வெ.ராஜசேகரன் மற்றும் நிர்வாகிகளும், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

**– அ.சென்னியப்பன்**, மாவட்டத்தலைவர், திருப்பூர்

# அவிநாசி பாரத ஸ்டேட் வங்கியில் பென்சனர் தினவிழா





**01.07.2024** வங்கியாளர் தினத்தை முன்னிட்டு, அவிநாசி பாரத ஸ்டேட் வங்கியில் பென்சனர் தினவிழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவில், மாவட்ட மற்றும் வட்டக்கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வங்கி மேலாளரிடம், ஓய்வூதியர் கணக்குகளை கட்டணமில்லா கணக்காக (Salary account) மாற்றம் செய்யக் கேட்டு சங்க கடிதம் வழங்கி, நமது சங்க ஓய்வூதியர் நண்பன் மாத இதழ் மற்றும் நினைவு பரிசாக புத்தகம் வழங்கப்பட்டது.

மேலாளர் தனது சிறப்புரையில், ஓய்வூதியர்களுக்கு வங்கியில் உள்ள சலுகைகள், கடன் வசதி, வைப்புத்தொகை வட்டி விகிதங்கள் ஆகியவை குறித்து விரிவாகக் கூறி, அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்து நினைவு பரிசு வழங்கினார்.

மாவட்ட தலைவர் திரு.அ.சென்னியப்பன், மாவட்டச்செயலாளர் திரு.செ.அந்தோணிசாமி, மாவட்ட துணைத்தலைவர் திரு.க.சுப்பிரமணியன், அவிநாசி வட்டக்கிளைத் தலைவர் திரு.பொ. சோமசுந்தரம், செயலாளர் திரு.இரா.பன்னீர்செல்வம், துணைத்தலைவர் திரு.என்.கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**– அ.சென்னியப்பன்**, மாவட்டத்தலைவர், திருப்பூர்

# அவிநாசி வட்டக்கிளையின் மாதாந்திர கூட்டம்





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டக்கிளையின் மாதாந்திரக் கூட்டம், 13.07.2024 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவிநாசி ஓய்வூதியர் சங்க அலுவலகத்தில் வட்டக்கிளைத் தலைவர் பொ.சோமசுந்தரம் தலைமையிலும்,மாவட்டத்தலைவர் அ.சென்னியப்பன், மாவட்டச்செயலாளர் செ.அந்தோணிசாமி மற்றும் திருமதி.கி.ரெங்கநாயகி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. வட்டக்கிளை துணைத்தலைவர் இரா. பழனிச்சாமி வரவேற்புரையாற்றினார்.

தலைமையுரை மற்றும் முன்னிலையுரைக்குப்பிறகு, மாவட்டத் துணைத்தலைவர் க.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். அவிநாசி வட்டக்கிளை அ.சண்முகம், என்.கணேசன், ஆர்.செந்தில்குமார், வெ.ராஜசேகரன், ஏ.கே.கந்தசாமி, சி.பாலசுப்பிரமணியம், மகளிரணி செயலாளர் திருமதி.ச.ராணி, திருமதி.பி.ருக்மணி, திருமதி.பி.பழனாத்தாள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். வட்டக்கிளைத் தலைவர் பொ.சோமசுந்தரம் தீர்மானங்களை வாசித்தார். வட்டக்கிளைச் செயலாளர் மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர் இரா.பன்னீர்செல்வம் நன்றியுரையாற்றினார். கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) 2024 ம் ஆண்டில் உறுப்பினர்கள் மற்றும் புரவலர்களையும் அதிக அளவில் விரைந்து சேர்க்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2) தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க திருப்பூர் மாவட்டப் பொருளாளரும், பணிநிறைவு பெற்ற தலைமை சர்வேயரும், என்.ஜி.ஓ. சங்க திருப்பூர் மாவட்ட துணைத்தலைவராக பணியாற்றியவரும், சங்கத்தின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவருமான செயல் வீரர் திரு.மு.நந்தகோபால் அவர்கள், கடந்த 10.07.2024 புதன்கிழமை அன்று உடல்நலக் குறைவு காரணமாக காலமாகிவிட்டார். அவரது மறைவுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3) ரூ.3 லட்சத்திற்கு மேல் ஓய்வூதியம் பெறும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களும், ரூ. 5 லட்சத்திற்கு மேல் ஓய்வூதியம் பெறும் 80 வயதுக்கு மேற்பட்டவர்களும், வருமான வரி கணக்கு தாக்கல் செய்யப்பட வேண்டுமென்ற விவரம் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது.

– **அ.சென்னியப்பன்**, மாவட்டத்தலைவர், திருப்பூர்

# ஓய்வூதியர் தினவிழா





**01.07.2024** அன்று பென்சனர் தினவிழாவை முன்னிட்டு, அவிநாசி உதவிகருவூல அலுவலர் திருமதி.பி.அனித்தர்ஷினி மற்றும் கணக்கர் திருமதி.தமிழ்செல்வி ஆகியோரால் ஓய்வூதியர் சங்க அவிநாசி வட்டக்கிளை சங்க அலுவலகத்தில், ஓய்வூதியர்களுக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில், மாவட்டத்தலைவர் திரு.அ.சென்னியப்பன், மாவட்டச்செயலாளர் திரு.செ.அந்தோணிசாமி, மாவட்ட துணைத்தலைவர் திரு.க.சுப்பிரமணியன், அவிநாசி வட்டக்கிளைத்தலைவர் திரு.பொ. சோமசுந்தரம், செயலாளர் திரு.இரா.பன்னீர்செல்வம், துணைத்தலைவர் திரு.கணேசன் மற்றும் பணிநிறைவு ஆசிரியர் கூட்டமைப்பு மாநில தலைவர் திரு.செ.சுப்பிரமணியன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

– **அ.சென்னியப்பன்**, மாவட்டத்தலைவர், திருப்பூர்

## ஆவடி வட்டக்கிளை சார்பில் தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் பிறந்த நாள் விழா






தானைத்தலைவர் மறைந்த திரு.சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா 20.07.2024 சனிக்கிழமை அன்று மாலை, ஆவடி வட்டக்கிளையில் சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டது.

விழாவில் வட்டக்கிளை தலைவர் திரு.ஆர்.அம்பிகை பாலன், செயலாளர் திரு.எம்.கண்ணன், பொருளாளர் திரு.எஸ்.வேலுச்சாமி மற்றும் சகோதரி ராமப்பிரியா ஆகியோர் தலைவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். குறுகிய காலத்தில் மேற்படி விழாவினை மிகச்சிறந்த முறையில் ஏற்பாடு செய்த பொருளாளர் திரு.எஸ்.வேலுச்சாமி அவர்களுக்கு ஆவடி வட்டகிளையின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது. கூட்ட முடிவில் அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது.

– **ஆர்.அம்பிகை பாலன்**, வட்டக் கிளை தலைவர்.

## மதுரையில் தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களுக்கு 88வது பிறந்த நாள் விழா





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க, மதுரை மாவட்டத்தின் சார்பாக, மதுரை, தல்லாகுளம் பொதுப்பணித்துறை அமைச்சுப்பணியாளர்களின் சங்கக் கட்டிடத்தில், 18.07.2024 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில், தமிழ்நாடு அரசு அமைச்சுப்பணியாளர்களுக்காக அவர்களின் வாழ்வு உயர நாளும் உழைத்த தானைத்தலைவர் தெய்வத்திரு. சிவ இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் பிறந்த நாள் கேக் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

தானைத்தலைவர், தனது 12 வது வயது முதல் செய்த சிறந்த சேவைகளை விரிவாக மாவட்டத்தலைவர் திரு.என்.ராமச்சந்திரன் எடுத்துரைத்தார். மாநில அமைப்பு செயலாளர் மு.ஜெயபாலன், மண்டலச்செயலாளர் மே.ரா.சுரேந்திரன், மாவட்ட துணைத்தலைவர் பெ.பாண்டிவேல், செயலாளர் இரா.சுப்புராமன், பொருளாளர் செ.காளிமுத்து, துணைத்தலைவர் எம்.சந்திரசேகரன் உட்பட விழாவில் 50 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

– **என்.இராமச்சந்திரன்**, மாவட்டத்தலைவர், மதுரை

# இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகிகள் தேர்தல் பேரவைக்கூட்டம்








தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், இராணிப்பேட்டை மாவட்ட **2024–2027**ஆம் ஆண்டிற்கான மாவட்ட சங்க நிர்வாகிகள் தேர்தல் பேரவைக்கூட்டம் **16.06.2024** அன்று இராணிப்பேட்டை, நவல்பூர், கங்காதர முதலியார் மேனிலைப்பள்ளியில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.

பேரவைக்கூட்டம் மாநிலத்தலைவர் தலைமையில் தேர்வு செய்யப்பட்ட திரு.என்.எஸ்.கருணாநிதி அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. தேர்தல் ஆணையாளர் தேர்தலில் போட்டியிட விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்ப கட்டணம் ரூ.100/– செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்று தாக்கல் செய்யுமாறு அறிவிப்பு வழங்கினார். அதன்படி விண்ணப்ப கட்டணம் செலுத்தி விண்ணப்ப படிவம் பெற்று தாக்கல் செய்து நிர்வாகிகள் போட்டியின்றி ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர் என தேர்தல் அலுவலர் அறிவித்தார். போட்டி யாருமில்லை என தெரிவித்தார்.

திரு.பி.பாலசுந்தரம் மாவட்டத் தலைவராகவும், திரு.ஆர்.ஏ.ஷாகீர்ஜான் மாவட்டச் செயலாளராகவும், திரு.ஜி.வஜ்ஜிரம் மாவட்டப் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். புதியதாக தேர்வு செய்யப்பட்ட அனைத்து நிர்வாகிகளையும் வாழ்த்தி முன்னாள் நிர்வாகிகள் உரையாற்றினார்கள். பின்னர் நாட்டுப் பண்ணுடன் பேரவை இனிதே நிறைவுற்றது.

புதிதாக தேர்வு செய்யப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் **04.07.2024** அன்று சென்னை சென்று மாநிலத் தலைவர் திரு.கோ.சீதாராமன் மற்றும் மாநில நிர்வாகிகளை தேர்தல் ஆணையாளர் திரு.என்.எஸ். கருணாநிதி அவர்களுடன் சந்தித்து அனைத்து நிர்வாகிகளின் வாழ்த்துக்களைப் பெற்றனர். மாநிலத்தலைவர் அவர்கள் இதற்கு முன்பு இருந்த நிர்வாகிகளைப் போல சிறப்பாகப் பணியாற்றி சங்கத்திற்கு வலுசேர்க்க வேண்டுமெனவும், நமது சங்கத்திற்கென தனியாக ஒரு கட்டிடம் கட்ட உத்தேசித்துள்ளதாகவும், அதற்கு தேவையான நிதியை மாவட்ட சங்கம் மூலம் பெற்று வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

**15.07.2024** அன்று புதிய மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட கருவூல அலுவலர்களையும் நேரில் சென்று சந்தித்து சால்வை அணிவித்து சங்க டைரியை கொடுத்து வாழ்த்து பெற்றனர். மேலும் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும் மரியாதை நிமித்தமாக நிர்வாகிகளுடன் சந்தித்து தேர்தல் ஆணையாளர் மாவட்ட நிர்வாகிகளாக தேர்வு செய்ய பட்டியலின் ஒரு நகலை அளித்து வாழ்த்துக்களைப் பெற்றனர்.

மாநிலத் தலைவர் வேண்டுகோளின்படி, **18.07.2024** அன்று தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் தானைத்தலைவர் அமரர் திரு. சிவ.இளங்கோ அவர்களின் **88**ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவினை சிறப்பாக நிர்வாகிகள் முன்னிலையில், அன்னாரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, உறுப்பினர்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இராணிப்பேட்டை மாவட்ட சங்க நிர்வாகிகளை நல்ல முறையில் கௌரவப்படுத்தி வாழ்த்தி அனுப்பிய மாநிலத்தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| **பா.பாலசுந்தரம்** | **கோ.வஜ்ஜிரம்** | **அ.ஷாகீர்ஜான்** |
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |

## திருவண்ணாமலை மாவட்ட ஓய்வூதியர் சங்க அவசரக்கூட்டம் மற்றும் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க, திருவண்ணாமலை மாவட்டத்தின் அவசரக் கூட்டம் மற்றும் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் **88**வது **(18.07.2024)** பிறந்த நாள் விழா, **18.07.2024** அன்று காலை **10** மணியளவில் திருவண்ணாமலை நகரம், காந்தி நகர் பைபாஸ் சாலை, மாதா மெடிக்கல் மாடியில், மாவட்டத்தலைவர் திரு.ந.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச்செயலாளர் திரு.கோ.சேகர் வரவேற்புரையாற்றினார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் இனிதே துவங்கியது.

முதலில், அமரர் சிவ.இளங்கோ அவர்களின் திருவுருவப் படத்தை, மண்டலச்செயலாளர் திரு.என். மாசிலாமணி அவர்கள் திறந்து வைத்தப்பிறகு, உறுப்பினர்கள் மலரஞ்சலி செலுத்தினார்கள். இக்கூட்டத்தில், மண்டலச்செயலாளர் திரு.என். மாசிலாமணி, மாவட்டத்தலைவர் திரு.ந.இராமலிங்கம், மாவட்டச்செயலாளர் திரு.கோ.சேகர், மாவட்டப் பொருளாளர் திரு.பூ.ராசேந்திரன், மாவட்ட துணைத் தலைவர்கள் திரு.ஆர்.மணிகண்டன், திரு.ஆர்.தங்கராசு, மாவட்ட தலைமை நிலையச் செயலாளர் திரு.ஏ.ராமச்சந்திரன், மாவட்டப் பிரச்சாரச்செயலாளர் திரு.எஸ்.அருணாசலம், மாவட்ட இணைச் செயலாளர்கள் திரு.கே.மகாகிருஷ்ணன், திரு.எம்.கோபண்ணா, திரு.ஏழுமலை, வட்டக்கிளைத் தலைவர் திரு.டி.பாண்டுரங்கன், வட்டக்கிளைச் செயலாளர் திரு.ஏ.சொக்கலிங்கம் ஆகியோர் தங்களது உரையில், அமரர்.சிவ.இளங்கோ அவர்களிடத்தில் பழகிய காலங்களில் தாங்கள் பெற்ற அனுபவங்களையும் மற்றும் அவர் மூலமாக தாம் பெற்ற சலுகைகளையும், அரசு அலுவலர்கள் தம்முடைய குறைகளை அவரிடத்தில் நேரிடையாகச் சென்று தெரிவித்தால், உடனடியாக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் ஊழியர்களை அழைத்துச்சென்று நிவர்த்தி செய்து தந்தவர் என்றும், மற்றும் அரசு அலுவலர்கள் இறந்தால் ரூ.**10,000/–** உதவித் தொகையை பெற்றுத் தந்தவர் என்றும், அரசு அலுவலர்கள் பணிக்காலத்தில் அகால மரணமடைந்தால், அவர்களுடைய குடும்பத்தில் படித்தவர்களில் ஒருவருக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை பெற ஆணை பெற்றுத் தந்தவர் என்றும், ரகசிய குறிப்பேட்டு முறை அறவே ஒழித்து, அரசு ஆணை பெற்றுத் தந்தவர் என்றும், மேலும் தற்காலிகமாக பல்வேறு துறைகளில் பணிபுரிந்தவர்களுக்கு **(10 ஆண்டுகளுக்கு மேல்)** நிரந்தர பணிநியமன ஆணை பெற்றுத் தந்தவர் அமரர் சிவ.இளங்கோ அவர்கள் என உரையாற்றினார்கள். இறுதியாக, மாவட்டச்செயலாளர் திரு.கோ.சேகர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

**– ந.இராமலிங்கம்,**
மாவட்டத்தலைவர், திருவண்ணாமலை

## ஆறுதல் தெரிவித்த நல்லிதயங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

நீண்டகாலமாக உடல் நலமின்மையால் அவதிப்பட்டு வந்த, எனது துணைவியார் கடந்த **08.07.2024**ல் தனியார் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவில் (ICU) அனுமதிக்கப்பட்டு, சிறப்பான சிகிச்சை பெற்று வந்த நிலையில், பல்வேறு பாதிப்புகளினால், சிகிச்சை பலனளித்திடாமல், கடந்த **24.07.2024** அன்று இரவு **10.30** மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை மிகுந்த வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது இறுதிச்சடங்கு **25.07.2024** அன்று மதியம் **12** மணியளவில் நடைபெற்றது.

இச்செய்தி அறிந்தவுடனேயே, நேரில் வந்து இறுதி மரியாதை செலுத்தி, இத்துயரத்தில் மனவேதனை அடைந்துள்ள எனக்கும், என் குடும்பத்தாருக்கும் ஆறுதல் தெரிவித்த சங்க மாநில/ மாவட்ட/வட்டக்கிளை மற்றும் இணைப்புச்சங்க நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் எனது குடும்பத்தார் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கோ.சீதாராமன்**
மாநிலத்தலைவர்

# திருவண்ணாமலை மாவட்ட மாதாந்திரக்கூட்டம்





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க, திருவண்ணாமலை மாவட்ட மையத்தின் மாதாந்திரக்கூட்டம், திருவண்ணாமலை நகரம், காந்தி நகர் பைபாஸ் சாலை, மாதா மெடிக்கல் மாடியில், **06.07.2024** சனிக்கிழமை அன்று காலை **10.30** மணியளவில் மாவட்டத்தலைவர் திரு.ந.இராமலிங்கம் தலைமையிலும், துணை ஆட்சியர், வருவாய்த்துறை (ஓய்வு) திரு.டி.கனகராஜ் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை, மாவட்ட தலைமை நிலையச் செயலாளர் திரு.ஏ.ராமச்சந்திரன் வரவேற்றார். மேலும் தன்னுடைய உரையில், மாவட்ட நிர்வாகம் சிறப்பாக செயல்பட நிதி வழங்கி ஒத்துழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அண்மையில் காலமான இம்மாவட்ட சங்க உறுப்பினர்களான திரு.ஆறுமுகம், மேலாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கலசப்பாக்கம் மற்றும் திரு.ஆர். சீனிவாசன், சுகாதார ஆய்வாளர் ஆகிய இருவரும் நமது சங்கத்தில் தீவிர உறுப்பினர்கள் மற்றும் ஓய்வூதியர் நண்பன் இதழ் சந்தாதாரர்களாகவும் மற்றும் நமது சங்கத்தில் சிறப்பாக செயல்பட்டு வந்தார்கள். அவர்கள் இருவருக்கும் இம்மாவட்டச் சங்கத்தின் சார்பாக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட துணைத் தலைவர் திரு.ஆர்.தங்கராஜ், மாவட்ட இணைச் செயலாளர்கள் திரு.இ.கிருஷ்ணமூர்த்தி, திரு.எம்.கோபண்ணா, திரு.கே.மகாகிருஷ்ணன், வட்டக்கிளைத் தலைவர் திரு.டி.பாண்டுரங்கன், வட்டக்கிளைத் தலைவர் திரு.என்.பச்சியப்பன், வட்டக்கிளைத்தலைவர் திரு.என்.கோபால், வட்டக்கிளைச் செயலாளர் திரு.ஏ.அல்லிமுத்து, வட்டக்கிளை துணைத்தலைவர் திரு.பி.அண்ணாமலை, வட்டக்கிளை பொருளாளர் திரு.எஸ்.அருள்தாஸ் மற்றும் உறுப்பினர்களான திரு.சி.பாண்டுரங்கன், திரு.ஏ.மனோகரன், திரு.எஸ். காந்தி, திரு.எம்.சுப்பிரமணி, திரு.பி. மணி, ஓட்டுநர், திரு.எல்.மாணிக்கம் ஆகியோர் தங்களது உரையில், **70** அகவை முடிந்தவர்களுக்கு **10** சதவீதம் கூடுதல் ஓய்வூதிய உயர்வு வழங்க வேண்டுமென்றும், ரயிலில் பயணம் செய்யும் மூத்த குடிமக்களுக்கு முன்பு போலவே **30** சதவீதம் கட்டணச்சலுகை வழங்க வேண்டுமென்றும் மற்றும் பழைய ஓய்வூதியத் திட்டத்தையே திரும்ப செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் உரையாற்றினார்கள்.

மாவட்டப் பொருளாளர் திரு.பி.ராசேந்திரன் அவர்கள், சென்ற மாத வரவு–செலவுகளை பட்டியலிட்டு வாசித்து,. சென்ற மாத சங்க நிகழ்வுகளைப் பற்றி விரிவாக உரையாற்றினார். மாவட்ட கருவூலத்திற்கு வாழ்நாள் சான்றிதழை ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்களுடைய ஓய்வு பெற்ற தேதிகளை குறித்து வைத்துக் கொண்டு முறையாக குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனவும், மேலும் நமது சங்கத்திற்கு தனியே வண்டலூரில் காலிமனை வாங்கி கிரையம் செய்யப்பட்டுள்ள இடத்தில் உடனடியாக கட்டிடம் கட்ட வேண்டியிருப்பதால், கட்டிட நிதியை வழங்காதவர்களும் மற்றும் கூடுதலாக கட்டிட நிதியை வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டு உரையாற்றினார்.

இறுதியாக, மண்டலச்செயலாளர் திரு.என். மாசிலாமணி அவர்கள் தமது உரையில், மாவட்டந்தோறும் முதியோர் இல்லம் தமிழக அரசு தனியே கட்டுக் கொடுக்க வேண்டுமெனவும், தொகுத்து வழங்கும் தொகையை (கம்யூடேசன்) **15** ஆண்டு பிடித்தம் செய்து வருவதை **12** ஆண்டாக குறைக்க அரசை வலியுறுத்த வேண்டுமெனவும், ஓய்வூதியர்கள் இறந்தால், ரூபாய் ஐம்பதாயிரம் வழங்கப்பட்டு வருவதை மாற்றி, ரூபாய் இரண்டு லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டுமெனவும், மத்திய அரசு மருத்துவப்படி ரூ.1000/– வழங்குவது போன்று, மாநில அரசும் ஓய்வூதியர்களுக்கு மாதம் ரூ.1000/– வழங்க வேண்டுமெனவும், மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை தமிழக அரசு நிவர்த்தி செய்ய வேண்டுமெனவும், ஓய்வூதியர்கள் அனைவரும் பாரத வங்கிக்கு சென்று தனக்குப் பிறகு வங்கியில் உள்ள கணக்குகளை மாற்றிக் கொள்ள நாமினேஷன் கொடுக்கப்பட வேண்டுமென கேட்டுக் கொண்டும் உரையாற்றினார்.

இறுதியாக, மாவட்டத் தலைமை நிலையச்செயலாளர் திரு.ஏ.ராமச்சந்திரன் நன்றி கூற, தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது. மாவட்ட மையம் சார்பாக அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டது.

**– ந.இராமலிங்கம்,**
மாவட்டத்தலைவர், திருவண்ணாமலை

# தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டக்கிளை பொதுக்குழு மற்றும் தேனி மாவட்ட செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டக்கிளை பொதுக்குழு கூட்டம் மற்றும் தேனி மாவட்ட செயற்குழு கூட்டம் **30.05.2024**, சனிக்கிழமை அன்று முற்பகல் **10.30** மணியளவில் பெரியகுளம் வடகரை அரண்மனை அருகில் அமைந்துள்ள ஸ்ரீஇராமானுஜக் கூடத்தில் நடைபெற்றது.

பொதுக்குழு கூட்டத்தினை பெரியகுளம் வட்டக்கிளைத் தலைவர் திரு.வி.நாகராஜன் அவர்களும், மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தினை மாவட்டத்தலைவர் திரு.எஸ்.சுப்பிரமணியன் அவர்களும் தலைமையேற்று நடத்தினர். வருகை தந்த அனைவரையும் பெரியகுளம் வட்டக்கிளைச் செயலாளர் திரு.ஆர்.ஆறுமுகம் வரவேற்றார். வட்டக்கிளை இணைச்செயலாளர் திரு.எஸ். கணேசன் ஆண்டறிக்கை வாசித்தார். வட்டக்கிளை பொருளாளர் திருமதி.ஐ.இந்திராமேரி நிதிநிலை அறிக்கை வாசித்தார்.

சங்கத்தின் வளர்ச்சி குறித்து வருகை தந்த பெரியகுளம் வட்டக்கிளை உறுப்பினர்கள் அனைவரும் அவரவர் கருத்துக்களை சிறப்பாகத் தெரிவித்தனர். பெரியகுளம் வட்டக்கிளை உறுப்பினரும், ஓய்வூதியர் நண்பன் புரவலருமான பணிநிறைவு பெற்ற பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை முதன்மை குடிமைப்பணி மருத்துவர் Chief Civil Surgeon ஏ.சீனிவாசன், M.B.B.S., DLO அவர்கள், மூத்த குடிமக்கள் உடல்நலம் சார்ந்த விழிப்புணர்வு கருத்துக்களை தெரிவித்து உரையாற்றினார்.

கூட்டத்திற்கு வருகை தந்த பெரியகுளம் வட்டக்கிளையின் 70 அகவை நிறைவு பெற்ற மூத்த உறுப்பினர்களுக்கு கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு சிறப்பு செய்யப்பட்டது. பின்னர் மாநில மண்டலச்செயலாளர் திரு.ஏ.மானுவேல், மாநில மகளிரணி அமைப்பாளர் திருமதி.கி.ரெங்கநாயகி ஆகியோர் முன்னிலை வகிக்க மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட துணைத்தலைவர்கள்



திரு.வி.நாகுமணி, திரு.டி.மாமுடிராஜ், திரு.பி.திருமேனி பாலகுரு, மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.எஸ்.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். புதிதாக மாவட்ட அமைப்புச் செயலாளராக நியமனம் செய்யப்பட்ட திரு.வி.பவானந்தம் அவர்களும் கலந்து கொண்டார். அன்னாருக்கு கைத்தறி துண்டு அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.

சங்கத்திற்கு புதிதாக உறுப்பினர் சேர்ப்பது, ஓய்வூதியர் நண்பன் புரவலர் ஆக்குவது, ஆயுள் சந்தா வசூலிப்பது, மாநில கட்டிட நிதி வசூலிப்பது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது. இறுதியாக மாவட்டப் பொருளாளர் திரு.எம்.ஸ்டீபன் நன்றியுரை நிகழ்த்தினார்.

இக்கூட்டம் நடைபெற பொருளுதவி செய்த மாவட்ட துணைத்தலைவர் திரு.பி.திருமேனி பாலகுரு மற்றும் மாவட்ட அமைப்புச்செயலாளர் திரு.வி.பவானந்தம் அவர்களுக்கும், இக்கூட்டம் நடைபெற சிறப்பாக செயல்பட்ட பெரியகுளம் வட்டக்கிளைச் செயலாளர் திரு.ஆர்.ஆறுமுகம் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. கூட்ட முடிவில் அனைவருக்கும் சுவையான மதிய உணவு வழங்கப்பட்டது.

**– எஸ்.சுப்பிரமணியன்,**
மாவட்டத்தலைவர், தேனி மாவட்டம்

# சேலம் மாவட்ட சிறப்புக் கூட்டம்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் சேலம் மாவட்ட நிர்வாகிகள் சிறப்புக்கூட்டம் மாவட்டத்தலைவர் திரு.ஆர்.ரகுபதி தலைமையில் 24.07.2024 அன்று மாலை சேலம் அரசு அலுவலர் ஒன்றிய கட்டிடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட நிர்வாகிகள், சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள், முன்னாள் மாவட்ட நிர்வாகிகள், மாநில துணைத்தலைவர் திரு.ராகவன், மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு.கோ.சண்முகசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்ட ஆக்கப்பூர்வமான இக்கூட்டத்தில், தற்போது காலியாகவுள்ள மாவட்ட நிர்வாகிகள் பதவிக்கு, மாவட்ட துணைத்தலைவராக திரு.எஸ்.வி.கோவிந்தராஜு மற்றும் மாவட்ட இணைச்செயலாளராக திரு.ஆர்.ஜெகதீசன், திரு.கே.அமிர்தலிங்கம் ஆகியோர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு இதற்கான ஒப்புதல் ஆகஸ்டு திங்களில் நடைபெறும் மாதாந்திரக் கூட்டத்தில் பெறப்படும் என முடிவு மேற்கொள்ளப்பட்டது.

**– மாவட்ட மையம்**

# பட்டுக்கோட்டை மண்ணின் மைந்தர் அமரர்.சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டக்கிளை சார்பாக, 18.07.2024, வியாழக்கிழமை அன்று தானைத்தலைவர் அமரர். சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா சீரும், சிறப்புமாக பட்டுக்கோட்டை நகரில் கொண்டாடப்பட்டது.

தானைத்தலைவர் 'சிவ.இளங்கோ இல்லம்' தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய அலுவலகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி வாழ்த்து ஒலி முழங்கப்பட்டது. இவ்விழாவில், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க வட்டக்கிளைத் தலைவர் திரு.ஆர்.ரெஜினால்டு செல்வக்குமார் தலைமையேற்றும், மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.எஸ்.சந்தானகிருஷ்ணன், மாவட்ட அமைப்புச்செயலாளர் திரு.எம். கலியபெருமாள் முன்னிலை வகித்தும், வட்டக்கிளைச் செயலாளர் திரு.சம்சுதீன், முன்னாள் செயலாளர் திரு.கந்தமாறன் ஆகியோர் புகழ் மாலை அணிவித்தும் விழாவினைக் கொண்டாட, வட்டக்கிளை துணைத்தலைவர் திரு.பா.மனோகரன் நிறைவுரையுடன் விழா இனிதே நிகழ்ந்தேறியது.

**– ஆர்.ரெஜினால்டு செல்வக்குமார்,**
தலைவர், பட்டுக்கோட்டை

## அன்பான வேண்டுகோள்

மாநில மையத்தால் மாதந்தோறும் அச்சிட்டு வெளியிடப்படும் சங்கத்தின் அதிகாரப்பூர்வமான மாத இதழான, "தமிழ்நாடு ஓய்வூதியர் நண்பன்" மாநிலம் முழுவதிலும் உள்ள ஆண்டு சந்தாதாரர்கள் / மூன்று ஆண்டு மற்றும் புரவலர்களுக்கு மாநில மையத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பட்டியல்படி (Mailing List) அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், சந்தாதாரர்களிடம் இருந்து மாத இதழ் முறையாகப் பெறப்படுவதில்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுவது வருத்தமாக உள்ளது.

சில இனங்களில் முகவரி மாற்றம் தெரியப்படுத்திடாத நிலையில், இதழ்கள் மீண்டும் மாநில மையத்திற்கே திரும்பி வரும் நிலை உள்ளது. சில இனங்களில் அஞ்சல் துறையினரால் பட்டுவாடா செய்வதில் உள்ள சிக்கல்களும் தெரிய வருகிறது. மாத இதழ்கள் முறையாக பெறப்படாத நிலையில், சற்றும் தாமதிக்காமல் அந்தந்த மாதங்களிலேயே இதன் விபரம் மாநில மையத்திற்கு தெரியப்படுத்தினால், குறைபாடுகளை நிவர்த்தி செய்து, குறைபாடுகள் தொடராமல் பார்த்துக் கொள்ள இயலும். மாதக் கணக்கில் (3 மாதங்கள்/ 6 மாதங்கள்) மாத இதழ்கள் பெறப்படவில்லை போன்ற விபரங்களை தெரியப்படுத்துவதைத் தவிர்த்து, அந்தந்த மாதங்களிலேயே தகவல் தெரிவித்தால் இதழினை அனுப்பி வைப்பதில் மாநில மையம் உறுதியாக உள்ளது. "சங்க மாத இதழ் – பயனுள்ள இதழாக உள்ளது இதழ் தொடர்ந்து கிடைக்கப் பெறாததால் நடவடிக்கை விபரங்களை உடனுக்குடன் அளித்திட முடியவில்லை" என்ற சந்தாதாரர்களின் வேண்டுகோள் நியாயமானதாகும். மாத இதழ் அந்தந்த மாதங்களில் கிடைக்கப் பெறவில்லையெனில், சந்தாதாரர்களே! (ஆண்டு/மூன்றாண்டு/ஆயுள் சந்தாதாரர்கள்/புரவலர்) உடனுக்குடன் மாநில மையத்திற்கு தகவல் தெரிவித்தால், தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு மாத இதழ் தாமதமின்றி கிடைத்திட ஆவன செய்யப்படும். தொடர்ந்து சந்தாதாரர்களின் நல் ஆதரவு தேவை.

தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொடர்பு எண்ணை கட்டாயம் குறிப்பிடவும்.

**– மாநில மையம்**

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்**

1) கோ.சீதாராமன், மாநிலத்தலைவர், 9444302896
2) என்.பக்தவத்சலம், தலைமை நிலையச் செயலாளர், 9444003843
3) டி.ஆர்.அன்னியப்பன், மாநில துணைப் பொதுச்செயலாளர், 8072127262
4) எஸ்.காளிங்கராயன், மாநிலப்பொருளாளர், 9884960849

# சென்னை பெருநகர மாதாந்திரக் கூட்டமும், தானைத் தலைவரின் பிறந்த தின விழாவும்

சென்னை பெருநகர மாவட்ட மாதாந்திரக் கூட்டமும், தானைத்தலைவர் அமரர்.சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த தினவிழாவும், 18.07.2024 அன்று காலை 10.30 மணியளவில், சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள சிவ.இளங்கோ அவர்களின் இல்லக் கட்டிடத்தில் மாவட்டத்தலைவர் திரு.சி.அற்புதம் செட்டி அவர்களின் தலைமையிலும், மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன் அவர்கள் முன்னிலையிலும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் துவங்கியது. வருகை புரிந்த அனைவரையும், சென்னை மாவட்ட பொறுப்பாளர் திரு.டி.ஆர்.அன்னியப்பன் மற்றும் மாவட்டச்செயலாளர் திரு.ரவிச்சந்திரநாத் பாபு அனைவரையும் வருக, வருக என வரவேற்று உரையாற்றினார்கள். மறைந்த ஓய்வூதியர்கள் மற்றும் உடல் நலம் பாதிக்கப்பட்டோர் விரைவில் குணமடைய இரண்டு நிமிடம் கூட்டுப் பிரார்த்தனையும், மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. புதிய உறுப்பினர்கள் திரு.ராஜாமணி, A.O., கண் மருத்துவமனை, திரு.ஹரி, வேளாண்மைத்துறை, திருமதி.கீதா, மின் ஆய்வுத்துறை ஆகியோர் தங்களை சுய அறிமுகம் செய்து கொண்டார்கள்.

மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன், மருத்துவத்துறை இணை இயக்குநர் திரு.சுவாமிநாதன், திரு.சந்திரபோஸ், மாநில துணைத்தலைவர் ஆகியோர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் திருவுருவச் சிலைக்கும், படத்திற்கும் மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து வருகை புரிந்த நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களும் மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள். இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட சென்னை–99, கொளத்தூர் சக்ரா கிரிடிக்கல் கேர் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் திருமதி. எஸ்தர் இவாஞ்சலின் மற்றும் மருத்துவமனை நிர்வாகிகள் தங்கள் மருத்துவமனையில் ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் வழங்கும் காசில்லா மருத்துவம், சிகிச்சைகளையும், பயன்பெற்றோர் விவரங்களையும் சிறப்பாக எடுத்துரைத்தனர். அவர்களுக்கு இக்கூட்டத்தில் பொன்னாடை அணிவித்து கவுரவிக்கப்பட்டது. மேலும், சிறப்பு விருந்தினர் திரு.அண்ணாமலை, எஸ்.பி.ஐ. காப்பீட்டு முகவர் அவர்கள், காப்பீட்டுத் திட்டத்தின் பயன்பாடுகளை விரிவாக எடுத்துக்கூறி அனைவருக்கும் அத்திட்டத்தின் விபரக் குறிப்பேடுகளை இலவசமாக வழங்கினார். சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட ஹெல்ப் ஏஜ் இந்தியா நிர்வாகிகள் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு நலச்சட்டம், 2007 மற்றும் தமிழ்நாடு பெற்றோர், மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நல விதிகள் 2009 தொடர்பான விளக்கமும், விழிப்புணர்வும் மற்றும் முதியோர்களுக்கான டிஜிட்டல் பாதுகாப்பு பயிற்சி வழிகாட்டி புத்தகம் மற்றும் கையேடுகளை இலவசமாக அனைவருக்கும் வழங்கினர்.

சங்க மூத்த உறுப்பினர் திரு.சிவனடியான் (வயது 91) அவர்கள் தனது சிறப்புரையில், தான் சிவ.இளங்கோ அவர்களிடம் பழகிய விதத்தினையும், சங்க விவாதங்களையும், அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளையும், பல நிகழ்வுகளையும் எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். மேலும் கட்டிட நிதியாக தொகையும் அளித்தார்.

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய முன்னாள் தென்சென்னை மாவட்டத்தலைவர் திரு.வி.பி.ராஜேந்திரன், ஓய்வூதியர் சங்க மாநில துணைத்தலைவர் திரு.சந்திரபோஸ், மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு.டி.ஆர்.அன்னியப்பன், சென்னை மாவட்டத் தலைவர் திரு.சி.அற்புதம் செட்டி, மாநில துணைத்தலைவர் வந்தவாசி திரு.விஸ்வநாதன், திருவள்ளூர் மாவட்டத்தலைவர் திரு.லோ. கோட்டீஸ்வரன், மாநில தலைமை நிலையச்செயலாளர் திரு.என்.பக்தவச்சலம் மற்றும் மருத்துவத்துறை இணை இயக்குநர் திரு.சுவாமிநாதன் ஆகியோர் தாங்கள் சிவ.இளங்கோ அவர்களுடன் பழகிய காலகட்டத்தில், அரசுடன் நடைபெற்ற அனைத்து சம்பவங்களையும் நினைவுபடுத்தியும், தனது கொள்கைப் பிடிப்பில் தனிக்கவனம் செலுத்தி அரசு அலுவலர்களுக்கு பெற்றுத்தந்த சலுகைகளையும், பட்டியலிட்டனர். ஜாயிண்ட் ஆக்ஷன் கமிட்டி மூலம் அரசுக்கு கோரிக்கை வைப்பதும், அதனை அரசு செயலாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி விரைவில் அரசாணை பெற்றுத்தந்த காலங்களை எல்லாம் நினைவு கூர்ந்தனர்.

சிறப்பு நிகழ்வாக, மாநிலத்தலைவர் திரு.கோ. சீதாராமன் அவர்கள் தனது சிறப்புரையில், நான் கண்ட ஒப்பற்ற தலைவர் என்றும், அயராது சங்கத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர் எனவும், அரசின் கடுமையான நடவடிக்கைகளுக்கு சிறிதும் அஞ்சாதவர் என்றும், அரசு அலுவலர்களுக்கான தேவைகள் குறித்து நேரிடையாக அரசின் உயரதிகாரிகள் மற்றும் அரசு செயலாளர்களிடம் தனக்கே உரிய பாணியில் பேச்சுவார்த்தை நடத்தி சாதகமான ஆணைகளைப் பெற்றுத்தந்தவர் என்றும் அக்கால கட்டத்தில் அவரோடு பழகிய காலங்கள் என்றும் கிடைக்காத பொற்காலங்கள் என்றும் சிறப்பு செய்து கூட்டத்தில் கலந்து கொண்ட சிறப்பு அழைப்பாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், திரு.சிவனடியான், நிர்வாக அலுவலர், மருத்துவத்துறை, மாநில துணைத்தலைவர் திரு.சந்திரபோஸ், திருமதி.டி.ஆண்டாள், இளநிலை நிர்வாக அலுவலர், பல் மருத்துவத்துறை, திரு.சுப்பிரமணியம், வட்டக்கிளை பொருளாளர், அம்பத்தூர் ஆகியோர் நமது சங்க கட்டிடத்திற்கு நிதிக்கான காசோலை வழங்கி பெருமை சேர்த்தனர். இக்கூட்டத்தில், மாவட்டச்செயலாளர் திரு.ரவிச்சந்திரநாத் பாபு நன்றி தெரிவித்தார். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் டீ, பிஸ்கட், மதிய உணவு ஆகியவை மாவட்டப் பொருளாளர் திரு.ஏ.விமலநாதன் அவர்களால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. முடிவில், தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**– ஆர்.ரவிச்சந்திரநாத் பாபு,**
செயலாளர், சென்னை மாவட்டம்

## அரசு அலுவலர் ஒன்றிய சேலம் மாவட்டத் தலைவருடன் சந்திப்பு




தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய சேலம் மாவட்டத்தலைவர் அவர்களை, சேலம் மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் தலைவர் திரு.ஆர்.ரகுபதி தலைமையில் மாவட்ட நிர்வாகிகள், சங்கத்தின் முன்னோடிகள், மூத்தவர்கள், முன்னாள் பொறுப்பு வகித்தவர்கள் மற்றும் மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு.கோ.சண்முகசுந்தரம், மாநில துணைத்தலைவர் திரு.ராகவன் ஆகியோர் சந்தித்து அறிமுகப்படுத்தி அரசு அலுவலர் ஒன்றிய சேலம் மாவட்டத்தலைவர் திரு.செல்வகுமார் அவர்களுக்கு கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்து மற்றும் ஆதரவு தெரிவித்தனர்.

**ஆர்.இரகுபதி**
மாவட்டத்தலைவர்

**ஆர்.ராகவன்**
மாநில துணைத்தலைவர்

## செங்கல்பட்டு மாவட்ட கருவூல அலுவலருடன் சந்திப்பு




தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன் அவர்கள் தலைமையில், செங்கல்பட்டு மாவட்டத்தலைவர் Dr.M.ஜேம்ஸ் பாலகிருஷ்ணன், மாவட்டச்செயலாளர் திரு.வி.மோகன், மாவட்ட துணைத்தலைவர் திரு.கே.ஸ்ரீதரன், மாவட்ட மகளிர் அணிச்செயலாளர் திருமதி.கே.பி.சித்ரா தேவி, செங்கல்பட்டு வட்டக்கிளைத்தலைவர் திரு.ஏ.ராமசாமி, வட்டக்கிளைப் பொருளாளர் திருமதி.மல்லிகா ஆகியோர், மாவட்ட கருவூல கூடுதல் அலுவலர் திரு.து.மணிமாறன் அவர்களை சந்தித்து, மாவட்டம் சார்பாக நடைபெறும் ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில், முன்கூட்டியே தகவல் வழங்கும்படியும், 80 வயது முடிவுற்ற ஓய்வூதியர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் உடக்குடன் வழங்கிட வட்ட வாரியாக உள்ள சார்நிலை கருவூல அலுவலர்களுக்கு உத்திரவு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

- **Dr.M.ஜேம்ஸ் பாலகிருஷ்ணன்,**
மாவட்டத்தலைவர், செங்கல்பட்டு

# பெரம்பலூர் மாவட்டத்தில் தானைத்தலைவர் அமரர். சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா












தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் தானைத் தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் **88** ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்டத்தில், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய கட்டிடத்தில், **18.07.2024** அன்று காலை **10.30** மணியளவில் மாவட்டத்தலைவர் திரு.வெ.சீவகன் அவர்கள் தலைமையில் பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில், முன்னாள் மாவட்ட தலைவர் மற்றும் ஓய்வூதியர் சங்க மாநில துணைத்தலைவர் திரு.கி.முகுந்தன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். மேலும், பெரம்பலூர் மாவட்ட ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் திரு.கு.சக்கரபாணி முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட மத்திய செயற்குழு உறுப்பினர் திரு. கு.இளையராஜா, மாவட்ட இணை செயலாளர் திரு.விஜயகுமார், மாவட்ட தணிக்கையாளர் திரு.அ.திலகராஜ், மாவட்ட மகளிர் அணி துணைத்தலைவி திருமதி. ஷோபனா, ஓய்வூதியர் சங்க மாவட்டச்செயலாளர் திரு.சிங்கபெருமாள், மாவட்ட துணைத்தலைவர் திரு.செல்வராஜ் மற்றும் இணைப்பு சங்கத் தலைவர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர். இறுதியில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாவட்ட பொருளாளர் திரு.மா.இளங்கோவன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**கு.சக்ரபாணி**
மாவட்ட தலைவர் பெரம்பலூர்

## இயற்கை எய்தினார்



மாநில துணைத்தலைவர்
திரு.சந்திரபோஸ் அவர்களின் சகோதரர்
திரு.அ.வெள்ளைச்சாமி அவர்கள் (வயது 76)
உடல்நலம் சரியில்லாமல் **12.05.2024** அன்று இயற்கை
எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்
கொள்கிறோம்.

**– மாநில மையம்**

# தென்காசி மாவட்ட மாதாந்திரக் கூட்டம்











தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க, தென்காசி மாவட்டத்தின் மாதாந்திரக் கூட்டம், 20.07.2024 அன்று விசுவாசம் குருசாமி இல்லத்தில் மாவட்டத்தலைவர் திரு.எஸ்.சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.இராமசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலை வகித்தார். மாவட்டத்தலைவர் வரவேற்புரை ஆற்றினார்.

மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.இராமசுப்பிரமணியன், மாவட்ட செயலாளர் திரு.முருகு பாண்டியன், அமைப்புச்செயலாளர் திரு.தாசையா, உறுப்பினர்கள் திரு.முத்துசாமி, திரு.குமாரசாமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தில் உறுப்பினர்களின் ஒப்புதலோடு பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1) தானைத்தலைவர் திரு.சிவ.இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது

2) ஜூலை மாதம் பிறந்த சங்க உறுப்பினர்கள் திருவாளர்கள் டி.எஸ்.முத்தையா, பி.சங்கரநாராயணன் மற்றும் கே.கடற்கரை ஆகியோருக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக, திரு.முத்தையா அவர்களுக்கு 81வது அகவை பிறந்துள்ளதை முன்னிட்டு அன்னாருக்கு சால்வை அணிவித்து சிறப்பிக்கப்பட்டது.

3) 2021 சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதியின்படி, 70 வயது பூர்த்தியான ஓய்வூதியர்களுக்கு 10 சதவீதம் கூடுதல் ஓய்வூதியம் தமிழக அரசு உடனடியாக வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாநில மையத்தை கேட்டுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

4) மத்திய அரசு, ஓய்வூதியர்களுக்கு மாதந்தோறும் மருத்துவப்படியாக ரூ.1000/– வழங்குவது போன்று, தமிழக அரசும் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாநில மையத்தை கேட்டுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

5) கமுட்டேசன் பிடித்தத்தொகை 15 ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகளாக குறைத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில மையத்தை கேட்டுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

6) மாநில சங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து மாதாந்திரக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் வாசித்து காண்பிக்கப்பட்டது.

7) நமது மாவட்ட சங்கத்தில் திருவாளர்கள் ஆ.சண்முகம், வருவாய்த்துறை, கந்தசாமி, கல்வித்துறை, மோகன், நீதித்துறை ஆகியோர் புதிய உறுப்பினர்களாக சேர்ந்துள்ளதற்கு மாவட்ட மையம் சார்பில் வாழ்த்தி வரவேற்கிறது.

கூட்ட முடிவில், மாவட்ட துணைத்தலைவர் திரு.ஹரிஹரசுப்பிரமணியன் அவர்கள் நன்றி கூற, கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**எஸ்.சந்திரன்**
மாவட்டத்தலைவர்

**முருகு பாண்டியன்**
மாவட்டச் செயலாளர்

# திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டக்கிளையின் மாதாந்திரக் கூட்டம்





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டக்கிளையின் மாதாந்திரக் கூட்டமானது 06.07.2024, சனிக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் வட்டக்கிளை சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப்பட்ட கூட்டத்திற்கு வட்டக்கிளைத் தலைவர் திரு.எம்.தங்கவேல் (உயர்கல்வித்துறை) தலைமையேற்றார்.

முதலாவதாக வட்டக்கிளைத் தலைவரின் தாயார் முத்தம்மாள் மற்றும் மாமா ஆர்.ருத்தரப்பன், தலைமையாசிரியர் ஆகியோர் மறைவுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. வட்டக்கிளை செயல் தலைவர் திரு.வி.இராமசாமி (வனத்துறை) அவர்களின் வரவேற்புரைக்குப்பின், இம்மாதத்தில் பிறந்த நாள் காணும் சங்க உறுப்பினர்கள் 34 பேருக்கு வாழ்த்து, "வாழ்க வளமுடன்", "நீடூழி வாழ்க" என கரவொலி மூலம் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த நிகழ்வாக சங்கத்தில் புதிதாக இணைந்த உறுப்பினர்கள் திரு.கே.ஆலயமணி (கல்வித்துறை) கண்காணிப்பாளர், திருமதி.டி.மணிமேகலை (கல்வித்துறை), திரு.கே.செல்வக்குமார், பட்டதாரி ஆசிரியர் (கல்வித்துறை), திருமதி.வி.புஷ்பா, குடும்ப ஓய்வூதியர் ஆகியோரை வரவேற்று வட்டக்கிளைத்தலைவர் மற்றும் துணைத்தலைவர் திருமதி.பி.செல்வி பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள்.

அடுத்த நிகழ்வாக, வட்டக்கிளைத் தலைவர் திரு.எம்.தங்கவேல் தனது தலைமையுரையில், சங்க உறுப்பினர்கள் சங்கத்திற்கு ஆற்ற வேண்டிய செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார். செயலர் (பொறுப்பு) திரு.கே.இராமசாமி கடந்த மாத சங்க செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். வட்டக்கிளை பொருளாளர் திரு.இருளப்பன் அவர்களின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் இம்மாத வரவு செலவு அறிக்கையை அடுத்த மாத மாதாந்திரக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அடுத்ததாக வட்டக்கிளை துணைத்தலைவர் திரு.எஸ்.அழகர்சாமி, பிரச்சாரச் செயலாளர் திரு.ஆர்.கோபால் (மருத்துவத்துறை) சங்க செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்கள். அடுத்த நிகழ்வாக புதிதாக சங்கத்தில் சேர்ந்த உறுப்பினர்கள் திரு.கே. ஆலயமணி, திருமதி.டி.மணிமேகலை, திரு.கே. செல்வக்குமார், திருமதி.வி.புஷ்பா ஆகியோர் தங்களைப் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினார்கள்.

இதைத் தொடர்ந்து மாவட்ட துணைத்தலைவர் திரு.சி.அர்ச்சுணன், திருமதி.எஸ்.சமீம் அவர்களது உரைக்குப்பின், மாவட்ட பிரச்சாரச் செயலாளர் திரு.ஆர்.பெருமாள் அவர்கள் ஒட்டன்சத்திரம் வட்டக்கிளையின் சிறப்பான செயல்பாடுகள் குறித்தும், மாநில சட்டக்குழுவில் ஒட்டன்சத்திரம் வட்டக்கிளையின் திரு.ஜே.கே. மற்றும் பாண்டுரங்கன் ஆகியோரின் பணிகள் குறித்தும் சிறப்பானதொரு உரை நிகழ்த்தினார்கள்.

அதன்பின், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் திரு.ஏ.விஸ்வநாதன், திரு.ஜே. சுந்தர்ராஜன், திரு.வி.கல்யாணசுந்தரம் ஆகியோர் உரையாற்றினார்கள். புதிய உறுப்பினர்கள் திருமதி.டி.மணிமேகலை, காப்பீடு அட்டை இதுவரை வழங்கப்படவில்லை என்றும், திரு.கே.ஆலயமணி அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

அடுத்ததாக முன்னணி உறுப்பினர்கள் திரு.எம். முருகானந்தம் (காவல்துறை), உடற்பயிற்சி குறித்தும், கால்நடைத் துறையைச் சேர்ந்த திரு.என்.ஆறுமுகம் ஹோமியோ சிகிச்சையின் நன்மைகள் குறித்தும், சிறுசேமிப்பு குறித்தும், புதிய உறுப்பினர்கள் செல்வக்குமார் (கல்வித்துறை) சங்கத்தில் தனது ஈடுபாடு குறித்தும் உரை நிகழ்த்தினார்கள்.

இறுதியாக, மாநில துணைப்பொதுச்செயலாளர் திரு.ஜே.கே. அவர்கள் தனது சிறப்புரையில்,

வட்டக்கிளையின் செயல்பாடுகள் குறித்தும், வட்டக்கிளைக்கு அலுவலக கட்டிடம், உறுப்பினர்களின் அலுவலகப் பிரச்சனைகளை நிவர்த்தி செய்வது குறித்தும், உறுப்பினர்களின் பிரச்சனைகளை சங்கத்திற்கு தெரிவித்து அதற்குரிய நிவாரணங்களுக்கு சங்கம் உறுதுணையாக பாடுபடும் எனவும் தனது உரையில் குறிப்பிட்டார்.

இன்றைய கூட்டத்தின் தீர்மானங்களை செயலாளர் (பொறுப்பு) திரு.கே.இராமசாமி அவர்கள் சமர்ப்பித்து கரவொலி மூலம் ஒப்புதல் பெற்றார். அடுத்ததாக திரு.கே.ஆலயமணி அவர்கள் நன்றி நவில, நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கூட்டத்தில் பங்கு பெற்ற அனைவருக்கும் மதிய உணவு மாநில பொதுக்குழு உறுப்பினர் திரு.வி.கல்யாண சுந்தரம் அவர்களால் வழங்கப்பட்டது. அவருக்கு சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

**தீர்மானங்கள்**

**1)** குடும்ப நல நிதி ரூ.50,000/– ஆக இருப்பதை ரூ.2 லட்சமாக உயர்த்தி வழங்கவும், குடும்ப ஒய்வூதியர்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்துமாறு தமிழக அரசை கேட்டுக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

**2)** வட்டக்கிளைப் பொருளாளர் உடல்நலக் குறைவாக உள்ளதால், பொருளாளர் பொறுப்பை மாநில பொதுக்குழு உறுப்பினர் திரு.கே.தத்தாரு (உள்ளாட்சித்துறை) அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி தீர்மானிக்கப்பட்டது.

**3)** புதிய உறுப்பினர்களை வரவேற்றும், மதிய உணவு வழங்கிய திரு.வி.கல்யாணசுந்தரம் (கல்வித்துறை) அவர்களை வாழ்த்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**– எம்.தங்கவேல்,**
தலைவர், ஒட்டன்சத்திரம் வட்டக்கிளை

## கள்ளக்குறிச்சி மாவட்ட கருவூல அலுவலருடன் சந்திப்பு






கள்ளக்குறிச்சி மாவட்ட கருவூலத்தில் அனைத்து ஓய்வூதியர் சங்க ஆலோசனைக் கூட்டம் 18.07.2024 அன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட கருவூல அலுவலர் திரு.பாபு தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க கள்ளக்குறிச்சி மாவட்டத்தலைவர் திரு.ஆ.நடராஜன் மற்றும் செயலாளர் திரு.கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டு குறித்த காலத்தில் செய்யவும், கூடுதல் ஓய்வூதியம் குறித்த காலத்தில் வழங்கவும் தகுந்த ஆலோசனை வழங்கப்பட்டது. கூட்டத்தில் கூடுதல் கருவூல அலுவலர் திருமதி.தமிழ்செல்வி அவர்களும், உதவி கருவூல அலுவலர் திரு.ரவி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**– ஆ.நடராஜன்,**
மாவட்டத்தலைவர், கள்ளக்குறிச்சி

## இயற்கை எய்தினார்



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், தருமபுரி மண்டலச்செயலாளர் திரு.எம். இரத்தினவேலு அவர்களின் மாமனார் திரு.மாணிக்கம் (எ) சிக்கண்ண கவுண்டர் அவர்கள், 03.07.2024 அன்று தனது 95வது வயதில் இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதிச்சடங்கில் தருமபுரி மாவட்டத்தலைவர் திரு.ஆர்.என்.வரதன், செயலாளர் திரு.கே.கோவிந்தசாமி, பொருளாளர் திரு.வி.கிருஷ்ணன், மாவட்ட ஆலோசகர் திரு.எம்.பொன்முடி மாவட்ட கல்வி அலுவலர் (ஓய்வு), தலைமை ஆசிரியர்கள் (ஓய்வு) திரு.ஆர்.இராஜகோபால், திரு.பி.இராஜசேகர்ன் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– **ஆர்.என்.வரதன்**, தலைவர், தருமபுரி மாவட்டம்

## மாநில மைய கட்டிட நிதி வசூல் விவரம்

| வ.எண். | விபரம் | ரொக்க ரசீது எண்/நாள் | தொகை |
|---|---|---|---|
| | கடந்த மாதம் 23.06.2024 வரை வரவு | | 46,16,028.00 |
| 1. | ஜி.சேகர், மருத்துவத்துறை, சென்னை–86 | 41937/27.06.2024 | 500.00 |
| 2. | ஜி.ஏ.லலிதாகுமாரி, சென்னை–57 | 41938/27.06.2024 | 1,000.00 |
| 3. | கல்யாண்குமார், சென்னை–61 | 41944/01.07.2024 | 500.00 |
| 4. | ஆர்.வாசுதேவன், சென்னை–53 | 41945/02.07.2024 | 501.00 |
| 5. | எஸ்.வெங்கடேசன், சென்னை–91 | 41946/02.07.2024 | 1,000.00 |
| 6. | மீனாட்சிசுந்தரம், ஷெனாய் நகர் | 41947/02.07.2024 | 1,000.00 |
| 7. | எம்.டி.இளங்கோவன், தாசில்தார், சென்னை | 41956/04.07.2024 | 1,000.00 |
| 8. | டி.கோவிந்தராஜன், முதல்வர் (ஓய்வு) பாண்டிச்சேரி | 41959/04.07.2024 | 1,000.00 |
| 9. | சி.என்.ராஜேந்திரன், MSO, திருவள்ளூர் | 41960/04.07.2024 | 1,000.00 |
| 10. | ராதா பார்த்தசாரதி பத்மம், சென்னை–91 | 41961/04.07.2024 | 1,500.00 |
| 11. | டி.லட்சுமி, சென்னை–56 | 41968/15.07.2024 | 1,000.00 |
| 12. | டி.தனசிங், சென்னை–99 | 41970/15.07.2024 | 500.00 |
| 13. | ஏ.முருகையப்பா, மதுரை | 41971/15.07.2024 | 1,000.00 |
| 14. | ஆர்.சுகுமாரி அம்மா, சென்னை–129 | 41972/15.07.2024 | 2,001.00 |
| 15. | ஆனந்த லட்சுமி, சென்னை–83 | 41973/15.07.2024 | 5,000.00 |
| 16. | பி.வாசுதேவன், சென்னை–53 | 41974/15.07.2024 | 1,000.00 |
| 17. | எஸ்.வெங்கடேசன், புழுதிவாக்கம் | 41975/15.07.2024 | 1,000.00 |
| 18. | ராஜேஸ்வரி, சென்னை–41 | 41976/15.07.2024 | 1,000.00 |
| 19. | ஏ.அப்துல்காதர் ஜமாலி, கள்ளக்குறிச்சி | 41977/15.07.2024 | 2,000.00 |
| 20. | ஏ.கண்ணன், வழக்கறிஞர், மதுரை | 41978/15.07.2024 | 1,000.00 |
| 21. | எஸ்.மகேந்திரபூபதி, DAO, Agri, பெரம்பலூர் | 41983/15.07.2024 | 1,000.00 |
| 22. | கே.குப்புசாமி, ஆசிரியர், அணைக்கட்டு | 41990/15.07.2024 | 3,000.00 |
| 23. | எம்.கார்த்திகேயன், BDO, வேலூர் | 41991/15.07.2024 | 1,000.00 |
| 24. | எம்.நாகபூஷணரெட்டி, குடியாத்தம், வேலூர் | 41992/15.07.2024 | 1,000.00 |
| 25. | வி.மணி, திருநின்றவூர் | 41993/18.07.2024 | 500.00 |
| 26. | சி.திருப்பதி, கல்வித்துறை, சென்னை–53 | 41994/18.07.2024 | 1,000.00 |
| 27. | என்.மணவாளன், துணைத்தலைவர், சென்னை | 41995/18.07.2024 | 3,000.00 |
| 28. | வி.சுப்பிரமணியன், சென்னை–23 | 41996/18.07.2024 | 10,001.00 |
| 29. | Dr. பி.ஆர்.செல்லதுரை, சென்னை–23 | 41997/18.07.2024 | 500.00 |
| 30. | வியாசமூர்த்தி, வட்டக்கிளைத்தலைவர், அம்பத்தூர் | 41998/18.07.2024 | 500.00 |
| 31. | ஏ.முருகன் சிவனடியான், AO, MDL, சென்னை | 41999/18.07.2024 | 5,000.00 |
| 32. | டி.ஆண்டாள், AO, MDL, சென்னை | 42101/18.07.2024 | 5,000.00 |
| 33. | ஏ.ஜோசப், லேப் டெக்னீஷியன், பரனூர் | 42103/18.07.2024 | 1,000.00 |
| 34. | ஏ.சந்திரபோஸ், மாநில துணைத்தலைவர், சென்னை (II) | 42104/18.07.2024 | 8,000.00 |
| 35. | வி.டேவிட்மோகன்குமார், தலைவர், கோவை | 42109/1.8.2024 | 5,000.00 |
| 36. | கே.ஆர்.செல்வராஜ், செயலாளர், கோவை | 42109/1.8.2024 | 5,000.00 |
| 37. | ஆறுமுகம், துணைத்தலைவர், கோவை | 42109/1.8.2024 | 3,000.00 |
| 38. | வாசுதேவன், DRCS, கோவை | 42109/1.8.2024 | 5,000.00 |
| 39. | ராபர்ட் கருணாகரன், CEO , கோவை | 42109/1.8.2024 | 5,000.00 |
| 40. | சி.ஆர்.ரகுநாதன், மாவட்ட ஆலோசகர், கோவை | 42109/1.8.2024 | 1,000.00 |
| 41. | இளங்கோவன், CEO , கோவை | 42109/1.8.2024 | 1,000.00 |
| 42. | என்.பத்மாவதி, மா.மகளிர் அணி செயலாளர், கோவை | 42109/1.8.2024 | 500.00 |
| 43. | இராஜகோபால், Supdt, Agri , கோவை | 42109/1.8.2024 | 1,000.00 |
| 44. | ஜார்ஜ் ஜான், GCT, கோவை | 42109/1.8.2024 | 500.00 |
| | | மொத்த வரவு | ரூ.47,08,031.00 |

## ஸ்ரீபெரும்புதூர் கருவூல அலுவலருடன் சந்திப்பு





காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் சார்நிலை கருவூலத்தில் புதிதாக பணியில் சேர்ந்துள்ள கருவூல அலுவலரை, தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க ஸ்ரீபெரும்புதூர் வட்டக்கிளைத்தலைவர் திரு.எம்.தாமோதரன் தலைமையில் நிர்வாகிகள் மரியாதை நிமித்தம் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

**– எம்.தாமோதரன்,**
வட்டக்கிளைத்தலைவர், ஸ்ரீபெரும்புதூர்

## செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியருடன் சந்திப்பு

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திரு.ஜெ.அருள்ராஜ் அவர்களை மாநிலத்தலைவர் திரு.கோ. சீதாராமன் அவர்கள் தலைமையில, செங்கல்பட்டு மாவட்டத்தலைவர் Dr.ஆ.ஜேம்ஸ் பாலகிருஷ்ணன், மாவட்டச்செயலாளர் திரு.வி.மோகன், மாவட்ட துணைத்தலைவர் திரு.கே.ஸ்ரீதரன், மாவட்ட மகளிர் அணிச்செயலாளர் திருமதி.கே.பி.சித்ரா தேவி, செங்கல்பட்டு வட்டக்கிளைத்தலைவர் திரு.ஏ.ராமசாமி, வட்டக்கிளைப் பொருளாளர் திருமதி.மல்லிகா ஆகியோர் சந்தித்து, புதிய மாவட்ட ஆட்சியர் கட்டிடத்தில் ஒரு அறை (ROOM) தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்து தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசீலனை செய்வதாக உறுதியளித்தார்.




**– Dr.M.ஜேம்ஸ் பாலகிருஷ்ணன்,**
மாவட்டத்தலைவர், செங்கல்பட்டு

## கண்ணீர் அஞ்சலி!

ஓய்வூதியர் சங்கம், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகரம் பாலாஜி நகரில் வசிக்கும் நமது சங்க உறுப்பினரும், தண்டராம்பட்டு பஞ்சாயத்து யூனியனில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பஞ்சாயத்து யூனியன் விரிவாக்க அலுவலர் (Extension Officer for Panchayat) திரு.பி.ஆர்.சுப்ரமணியம் அவர்கள் கடந்த **20.06.2024** அன்று இயற்கை எய்தினார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

மாவட்டத்தின் சார்பாகவும், மாநில மையத்தின் சார்பாகவும் அன்னாரது குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**– ந.இராமலிங்கம்,**
மாவட்டத்தலைவர், திருவண்ணாமலை

# சிறப்பு நிகழ்வுகள்



ஒட்டன்சத்திரம் வட்டக் கிளை ஓய்வூதியர் சங்கத்தில் திருமதி. மணிமேகலை கல்வித் துறை / கே.ஆலயமணி கண்காணிப்பாளர் கல்வித்துறை இருவரும் உறுப்பினர்களாக இணைந்த நிகழ்வு



A.ராஜு உதவி கருவூல அலுவலர் சார்நிலை கருவூலம் ஒட்டன்சத்திரம் பணி ஓய்வு பெற்றார். 31.5.2024அன்று வட்டக் கிளை சார்பாக பாராட்டி நினைவு பரிசு வழங்கப்பட்டது.

# பணிநிறைவு பாராட்டு விழா



தேனி மாவட்டத்தில், மருத்துவத்துறையில், அமைச்சுப்பணியில், பதவி உயர்வில் பல பொறுப்புகளில் பணியாற்றி வந்த திரு.எம். ரவிச்சந்திரன் அவர்கள் இறுதியாக நிர்வாக அலுவலர் பதவி உயர்வில் திண்டுக்கல் அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றி வந்த நிலையில், 30.06.2024 அன்று பணிநிறைவு பெற்றார். அவர் தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தில் ஆயுள் உறுப்பினராகவும், ஓய்வூதியர் நண்பன் மாத இதழில் புரவலராகவும் சேர்ந்துள்ளார். அன்னாரை வரவேற்று தேனி மாவட்டச் செயலாளர் திரு.பி.காளிமுத்து மற்றும் உத்தமபாளையம் வட்டக்கிளைச் செயலாளர் திரு.எம்.முருகன் ஆகியோர் அன்னாருக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தனர்.

– **ச.சுப்பிரமணியன்**, மாவட்டத்தலைவர், தேனி

# பணிநிறைவு பாராட்டு விழா

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், வந்தவாசி வட்டக்கிளையின் மகளிர் அணிச்செயலாளர் திருமதி.எம். செல்வமணி, பொது சுகாதாரத்துறை இவருடைய கணவர் திரு.எம்.பச்சையப்பன் அவர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராகப் பணியாற்றி 30.05.2024 அன்று உத்திரமேரூர் பணிமனையில் பணி ஓய்வு பெற்றார். இவ்விழாவில், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க மாநில துணைத்தலைவர் திரு.கே.விஸ்வநாதன், வந்தவாசி வட்டக்கிளைத்தலைவர் திரு.எல்.பாலச்சந்திரன் மகளிர் அணி வந்தவாசி கிளைச்செயலாளர் திருமதி.வி.உதயமதி ஆகியோர் கலந்து கொண்டு ஓய்வூதியர் நண்பன் புத்தகம் அளித்து வாழ்த்து தெரிவித்தனர்.

– **எல்.பாலச்சந்திரன்**, வட்டக்கிளைத் தலைவர், வந்தவாசி

# உடல்நலம் விசாரித்தல்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், வந்தவாசி வட்டக்கிளைச் செயலாளர் திரு.ஆர்.ஏழுமலை, கல்வித்துறை அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக தனது தேசூர் வீட்டில் சிகிச்சை பெற்று வருபவரை, மாநில துணைத்தலைவர் திரு.கே.விஸ்வநாதன், அமைப்புச்செயலாளர் திரு.ஏ.குணசேகரன் ஆகியோர் நேரில் சென்று நலம் விசாரித்தனர்.

– **எல்.பாலச்சந்திரன்**,
வட்டக்கிளைத் தலைவர், வந்தவாசி

## தஞ்சை, திருவையாறு வட்டக்கிளையில் தானைத்தலைவரின் பிறந்த தினவிழா



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், திருவையாறு வட்டக்கிளையில், வட்டக்கிளைத்தலைவர் திரு.இரா.செல்வராசு அவர்கள், 18.07.2024, வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்தார். திரு.சிவ. இளங்கோ அவர்களின் 88வது பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. கிளைத்தலைவர் திரு.இரா.செல்வராசு, மதிப்பியல் ஆலோசகர் திரு.வீ.ஜெயராமன், உறுப்பினர் திரு.தி.வாசுதேவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**– இரா.செல்வராசு,**
வட்டக்கிளைத்தலைவர், திருவையாறு

## திருவையாறு வட்டக்கிளையின் ஜுலை மாதக்கூட்டம்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், திருவையாறு வட்டக்கிளையின் ஜுலை, 2024 மாதக்கூட்டம், திருவையாறு வட்டக்கிளைக் கட்டிடத்தில், 05.07.2024, வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் தலைவர் திரு.இரா.செல்வராசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உறுப்பினர் திருமதி.கோ. நாகலெட்சுமி அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாட, திரு.எஸ். ஹென்றிதாஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

வட்டக்கிளை உறுப்பினர் ஓய்வு பெற்ற ஆசிரியை செல்வி.மதலை மரியம்மாள் 13.06.2024 அன்று இயற்கை எய்தியமைக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நிர்வாகக்குழு உறுப்பினர் திரு.அன்பு சுப்பிரமணியன் அவர்கள் "............ முறை சார்ந்த" என்ற குறளுக்கு மன்னர்களின் ஒற்றர்களைப் பற்றிக் கூறி அழகாக விளக்கமளித்தார்.

தலைவர் திரு.இரா.செல்வராசு அவர்களால் உறுதிமொழி வாசிக்கப்பட்டு அனைவராலும் கூறப்பட்டது. செயலர் திரு.வேணுகோபாலன் அவர்களால் சென்ற மாத கூட்ட அறிக்கையும், இணைச்செயலாளர் திரு.இரா.சச்சிதானந்தன் அவர்களால் வரவு செலவு அறிக்கையும் வாசிக்கப்பட்டது. வரவு செலவு அறிக்கை திருத்தம் ஏதுமின்றி அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.


ஔவை கோட்ட நிறுவனர் திருவையாறு முனைவர் திரு.மு.கலைவேந்தன் அவர்கள், கலைஞர் நூற்றாண்டு நினைவாக கலைஞரைப் பற்றி 100 நூல்கள் வெளியிட்டதற்கு India Book of Records வெகுமதி பெற்றதற்கு அவருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். பின்பு திரு.மு.கலைவேந்தன் அவர்கள் ஏற்புரை வழங்கினார். தலைவர் திரு.இரா.செல்வராசு அவர்கள் ஆண்டுவிழாவைப் பற்றிக் கூறி மற்றவர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறும்படி கேட்டுக்கொண்டார்.

வட்டக்கிளை உறுப்பினர்கள் ஓய்வு பெற்ற வட்டாட்சியர் திரு.டி.வாசுதேவன், முனைவர் திரு.மு.கலைவேந்தன், திரு.எஸ்.ஹென்றிதாஸ், திருமதி.தேவேந்திரி, திரு.வி.சுப்பிரமணியன், திரு.அன்பு சுப்பிரமணியன் ஆகியோர் தங்கள் கருத்துக்களைக் கூறினர். மதிப்பியல் ஆலோசகர் ஓய்வு பெற்ற வட்டாட்சியர் திரு.வீ.ஜெயராமன் அவர்கள், ஆண்டு விழாவைவிட, வட்டக்கிளை கட்டிடம் சீர் செய்யப்பட்டு கட்டிடத்தை நல்லமுறையில் உருவாக்குவதே முக்கியம் எனக் கூறினார்.

வட்டக்கிளைத் தலைவர் திரு.இரா.செல்வராசு அவர்கள், ஆண்டுவிழாவில் மாநில, மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும், மற்ற கிளை பொறுப்பாளர்கள் மற்றும் மற்ற ஓய்வூதியர் அமைப்புகளும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் கூறினார். ஜுன் 2024 மாதக் கூட்டத்தில் தேநீர் விருந்தளித்த திருமதி.ஜி.நாகலெட்சுமி மற்றும் ஜுலை மாத கூட்டத்தில் தேநீர் விருந்தளித்த திருமதி. சா.தேவேந்திரி ஆகியோர் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். அமைப்புச்செயலாளர் திரு.வி.ஏ.கிருஷ்ணன் அவர்கள் நன்றி கூற, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**– இரா.செல்வராசு,**
வட்டக்கிளைத்தலைவர், திருவையாறு

# சிறப்பு நிகழ்வுகள்





கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாவட்டச்செயலாளர் திரு.செல்வராஜ் அவர்கள் மேற்கொள்ளும் நேர்காணல் பணி பாராட்டுக்குரியது.



கோவை கூட்டுறவுத்துறை சங்கங்களின் துணைப்பதிவாளர் திரு.ஜெ.பிராங்கிளின் தாமஸ் அவர்கள், 30.06.2024 அன்று பணிநிறைவு பெற்றார், கோவை மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தலைவர் திரு.ஜெ. டேவிட் மோகன்குமார், செயலாளர் திரு.செல்வராஜ் ஆகியோர் சால்வை அணிவித்து வாழ்த்துரை வழங்கினர்.





திருநெல்வேலி மாவட்டம், டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை சார்பில், 28.07.2024 அன்று நடைபெற்ற சிறப்பு முகாமில், மாவட்ட ஓய்வூதியர் சங்க நிர்வாகிகள், மாநில துணைத்தலைவர் திரு.சாமி. நல்லபெருமாள், மாவட்ட துணைத்தலைவர் திரு.இரா.சீத்தாராமன், மாவட்டச்செயலாளர் திரு.வி.பாஷ்யம், அமைப்புச்செயலாளர் திரு.செ.வெங்கடாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.







நாமக்கல் மாவட்ட ஓய்வூதியர் சங்க துணைத்தலைவர்
திரு.இராசக்கவுண்டர், உறுப்பினர்களை சந்தித்து கட்டிட நிதி பெறும் நிகழ்வுகள்

## திருமண விழா



செங்கல்பட்டு மாவட்ட ஓய்வூதியர் சங்க உறுப்பினரும், ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்தாளுநராகப் பணியாற்றியவருமான திரு.பாஸ்கர் அவர்களின் மகன் திரு.அஸ்வின் – செல்வி.பவித்ரா ஆகியோரின் திருமண வரவேற்பு மறைமலை நகரில் சிறப்பாக நடைபெற்றது. மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன் அவர்கள், நிர்வாகிகளுடன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

## 45வது திருமண நாள் விழா



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், திண்டுக்கல் மாவட்ட, மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.ஏ.ஜெகராஜன் – திருமதி.பாப்பாத்தி இவர்களது **45**வது திருமண நாள் **11.07.2024** அன்று மதுரை மீனாட்சி அம்மன் சொக்கநாதர் திருக்கோயிலில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாநில மையமும், மாவட்ட மையமும் அன்னாரை வாழ்த்துகிறது.

---

**NS-MISCOOTHR/21/2024-NPCS(RNI)**
**GOVERNMENT OF INDIA**
**OFFICE OF THE PRESS REGISTRAR GENERAL OF INDIA**
**(MINISTRY OF INFORAMTION & BROADCASTING)**
9th Floor, Soochna Bhawan, CGO Complex
Lodhi Road, New Delhi – 110003

Dated: 25.07.2024

**ADVISORY No. 19 of 2024**

**Subject: Extension of last date for e-filing of Annual Statements through Press Sewa Portal for FY 2023-24 –regarding**

In continuation of this office Advisory (No. 11 of 2024) dated 20.05.2024, the last date for e-filing of Annual Statements through Press Sewa Portal for Financial Year 2023-24 is hereby extended up to **31st August, 2024.**

2. In case of any difficulty, our helpdesk may be contacted for assistance at **011-24369981, 011-24369978** or email at **it-helpdesk.rni@gov.in.**

3. This issues with the approval of the Press Registrar General.


29.7.24

(Rajith Chandran M.R.)
**Deputy Press Registrar General**

## திருமண வைபவம்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், தேனி மாவட்டம், தேனி வட்டக்கிளை புரவலரும், வட்டக்கிளையின் செயலாளரும், கூட்டுறவுத் துறையில், முதுநிலை ஆய்வாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவருமான திரு.பி.சங்கரன் – திருமதி.எஸ்.செல்வி தம்பதியினரின் புதல்வன் திருநிறைச்செல்வன் எஸ்.அருண்குமார், எம்.எஸ்.ஸி., (விவ) வேளாண் அலுவலர் – பி.பி.கீர்த்தனா, பி.எஸ்.ஸி., (விவ) வேளாண் அலுவலர் ஆகியோரின் திருமண வைபவம் 12.06.2024 அன்று வீரபாண்டி ஸ்ரீஅம்மையப்பன் திருமண மகாலில் இனிதே நடைபெற்றது.

மணமக்களை தேனி வட்டக்கிளைத் தலைவரும், மத்திய செயற்குழு உறுப்பினருமான திரு.எஸ். ஆறுமுகம், மாவட்ட இணைச்செயலாளர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், தேனி வட்டக்கிளை பொருளாளர் திரு.பி.மூக்கன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். தமிழ்நாடு



ஓய்வூதியர் சங்கம், தேனி மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மணமக்கள் வாழ்க வளமுடன் என்று இனிதே வாழ்த்துகிறது.

– **ச.சுப்பிரமணியன்**, மாவட்டத்தலைவர், தேனி

## திருமண வாழ்த்து

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், விழுப்புரம் மாவட்ட துணைத்தலைவரும், பொது சுகாதாரத்துறையில் அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவரும், பொது சுகாதாரத்துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்க மேனாள் மாநில பொதுச்செயலாளருமாகிய திண்டிவனம் திரு.கோ. ஞானசேகர், பி.ஏ., திருமதி.விஜயலட்சுமி, எம்.ஏ., CHN (ஓய்வு) தம்பதியரின் இளைய குமாரன் திருநிறைச்செல்வன் ஜி.ஜெகதீஸ்வரன், பி.இ., திண்டிவனம் திரு.பி.கே.ராஜன் – சுசீலா தம்பதியரின் இளைய புதல்வியுமான திருநிறைச்செல்வி கே.பவித்ரலட்சுமி, பி.இ., ஆகியோரின் திருமணம் 07.07.2024, ஞாயிற்றுக்கிழமை அன்று காலை மயிலம் முருகன் சன்னதியில் நடைபெற்றது. அன்று மாலை திண்டிவனம் கே.ஆர்.எஸ்.அம்மா மஹாலில் திருமண வரவேற்பு மிகச்சிறப்பாக நடைபெற்றது. வரவேற்பு நிகழ்வில், மாவட்டத்தலைவர் திரு.து.புருஷோத்தமன், மாவட்டச்செயலாளர் திரு.அ.குருசேகரன்,



திண்டிவனம் வட்டக்கிளை பொருளாளர் திரு.பி.ராஜசேகர், திண்டிவனம் திரு.பாரதி பன்னீர்செல்வம், விழுப்புரம் திரு.இளங்கோவன் மற்றும் ஓய்வூதியர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

– **அ.குருசேகரன்**, மாவட்டச்செயலாளர், விழுப்புரம்

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டக்கிளையின் ஆயுள் உறுப்பினரும், தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான திரு.இ.சம்பத் அவர்கள், 02.07.2024 அன்று உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் மாநில துணைத்தலைவர் திரு.கே.விஸ்வநாதன், வந்தவாசி வட்டக்கிளைத்தலைவர் திரு.எல். பாலச்சந்திரன் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

– **எல்.பாலச்சந்திரன்**, வட்டக்கிளைத் தலைவர், வந்தவாசி

# திருமண வாழ்த்துக்கள்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டக்கிளை உறுப்பினரும் மற்றும் புரவலரும், மருத்துவத்துறையில் ஆசுகூ ஆகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான திரு.பி.ராஜாங்கம் – மாரியம்மாள் தம்பதியினரின் புதல்வன் திருநிறைச்செல்வன் Dr.ஆர்.சுதர்சன், B.D.S., - திருநிறைச்செல்வி புஷ்பபூர்ணிமா, B.Sc., இவர்களின் திருமணம் 03.07.2024 அன்று எரசை நாயுடு மக்கள் மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. புதுமணத் தம்பதிகளை உத்தமபாளையம் வட்டக்கிளைச் செயலாளர் திரு.எம்.முருகன் அவர்கள் நேரில் சென்று மாவட்ட மையத்தின் சார்பில் பரிசினை அன்பளிப்பாக அளித்து தேனி மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் சார்பில் இனிய வாழ்த்துக்களை தெரிவித்தார்.

**– ச.சுப்பிரமணியன்**, தலைவர், தேனி மாவட்டம்



---

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டக்கிளையின் உறுப்பினரும், மருத்துவத்துறையில் மருந்தாளுநராகப் பணியாற்றியவரும், சங்கக் கட்டிட நிதிக்கு ரூ.5000/– நிதி அளித்தவருமான திரு.கார்வண்ணன் அவர்களின் மகன் திருமணம் வந்தவாசியில் நடைபெற்றது.



மேற்படி திருமண நிகழ்ச்சிக்கு ஓய்வூதியர் சங்க மாநில துணைத்தலைவர் திரு.கே. விஸ்வநாதன், வந்தவாசி வட்டக்கிளைத்தலைவர் திரு.எல்.பாலச்சந்திரன், துணைத்தலைவர் திரு.பி.முருகேசன், பொருளாளர் திரு.எஸ். பாலசுப்பிரமணியம் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

**– எல்.பாலச்சந்திரன்,**
வட்டக்கிளைத் தலைவர், வந்தவாசி

# திருமண வரவேற்பு விழா



கிருஷ்ணகிரி மாவட்டம், வட்டார கல்வி அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு.ஆர்.கங்காதரன் அவர்களுடைய மகன் செல்வன் எஸ்.கணேஷ், மணமகள் செல்வி.ஜி.அருணா ஆகியோரின் திருமண வரவேற்பு 16.06.2024 அன்று கிருஷ்ணகிரி மீனாட்சி மகாலில் நடைபெற்றது. வருகை புரிந்த திரு.ஆர்.ராமகிருஷ்ணன், மேனாள் மாவட்டத்தலைவர், TEDOSA, திரு.பிரசாத், கண்காணிப்பாளர், திரு.நாகராஜன், நேர்முக உதவியாளர், திரு.தில்லை நடராஜன், கண்காணிப்பாளர் ஆகியோர் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# அணைக்கட்டு வட்டக்கிளைக் கூட்டம்









வட்டக்கிளையின் மாதாந்திரக்கூட்டம் செதுவாலை திருமண மண்டபத்தில் 27.7.2024–ம் தேதி துணைத்தலைவர் ஏகாம்பரம் தலைமையில் நடைபெற்றது .திரு. தங்கவேலு தலைமை ஆசிரியர் வரவேற்புரை ஆற்றினார். செயலர் கதிர்வேலு சென்றமாத நிகடிநவு அறிக்கையினை வாசித்தார். தொடர்ந்து காட்பாடி மகளிரணி செயலர் கௌசல்யா, மாவட்ட அமைப்பு செயலர் ராமானுஜலு, ராணிப்பேட்டை மு.மா.தலைவர் லோகநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மாவட்ட தலைவர் பொன். திருவெங்கடேசுவரன் சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் மாவட்ட மகளிரணி வனிதா, மலர்க்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக வட்ட பொருளாளர் பொன்முடி அவர்கள் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது. அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

**பொன். திருவெங்கடேசுவரன்**
மாவட்ட தலைவர், வேலூர்.

# கோவை மாவட்ட ஆட்சியருடன் ஆலோசனை கூட்டம்







கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் மண்டல செயலாளர் திரு.பூவலிங்கம் மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# CHAKRA CRITICAL CARE CENTER AND HOSPITALS

## GOVERNMENT INSURANCE CLAIMABLE HOSPITAL




## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கான

# கட்டணம் இல்லா மருத்துவம்

அரசு பணியில் அயராது உழைக்கும் மற்றும் உழைத்து களைத்த அனைத்து ஊழியர்களும் சக்ரா மருத்துவமனை வழங்கும் கட்டணமில்லா மருத்துவத்தை பயன்படுத்தி தங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்திக்கொள்ள ஓர் அறிய வாய்ப்பு

## DR. அமுதகுமார் இராமசாமி

அவர்களின் சிறப்பான ஆலோசனைகளோடு, கூடிய சிகிச்சைகளுடன், 90 வயதிற்கும் மேல் பூரண உடல் நலத்துடன், ஆரோக்கியத்தை அரவணைத்துச் செல்ல அழைக்கிறது சக்ரா மருத்துவமனை.

## மருத்துவமனையின் சிறப்பம்சங்கள்

அனைத்து தனியார் மருத்துவ காப்பீட்டு திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை

## திரு. கே. இராமசாமி

வணக்கம் எனது பெயர் கே. இராமசாமி நான் மருத்துவத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற அரசு ஊழியர், எனக்கு வெகு காலமாக தீராத மூட்டு வலி இருந்தது மேலும் வயது முப்பினால் ஏற்படும் சிறு உடல் உபாதைகளும் இருந்தது. கடந்த மாதம் ஓய்வூதியர் சந்திப்பில் பங்கேற்ற சக்ரா மருத்துவமனை தங்களது கட்டணமில்லா மருத்துவ சேவை பற்றி எடுத்துரைத்தார்கள். மேலும் இந்த கட்டணமில்லா மருத்துவ சேவையை எங்கள் ஓய்வூதியர் சங்கத்தில் பல நபர்கள் பயன்படுத்தி பலன் அடைந்தனர் எனவும் அறிந்துகொண்டேன். உடனே நானும் சக்ரா மருத்துவமனை சென்று அங்கு மருத்துவரை அணுகினேன், அவர் என்னை பரிசோதித்து உங்களுக்கு மூட்டு தேய்மானம் ஆகிற்று தாங்கள் மருந்து ஊசி மூலம் சரி செய்து கொள்ளலாம் என கூறினார். நானும் நான்கு நாட்கள் மருத்துவமனையில் பிசியோதேரபி மற்றும் மருந்துகள் மூலம் சிகிச்சை பெற்று நல்ல பலன் கிடைத்தது. மேலும் மாத்திரை மருந்துகளும் 10 நாட்களுக்கு இலவசமாக கொடுத்தார்கள்.மேலும் அரசுப்பணியாளர்கள் அரசு நமக்கு அளித்த நமது மருத்துவ காப்பீடு அட்டையை பயன்படுத்தி தங்களின் உடல் உபாதைகளை சரி செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எண்.68&69 , 17வது தெரு, (செந்தில் நகர் பஸ் ஸ்டாப் அருகில்) ரிங் ரோடு, கொளத்தூர், சென்னை-600099.

மருத்துவம் தொடர்பான சேவைகளுக்கு அழைக்க

**8925904276 | 8925904300**

RNI No : TNTAM/2015/64219 **TAMILNADU OYUVOOTHIAR NANBAN** Tamil Monthly - **JUNE - 2024**
Postal Reg No.TN/CH(C)/525/2019-2021 TN/PMG(CCR)WPP/573/2019-2021 Date of Publication 1st Week of every month



## இயற்கை எய்தினார்

மாநில தலைவர்
திரு. கோ. சீதாராமன்
அவர்களின் துணைவியார்
**திருமதி.S.அழகம்மாள்**
அவர்கள் 24.07.2024 அன்று
இயற்கை எய்தினார்
என்பதை வருத்தத்துடன்
தெரிவித்து கொள்கிறோம்.











மூத்த சங்க நிர்வாகி திரு. சிவனடியான் நிர்வாக அலுவலர், மருத்துவத்துறை அவர்களின் 91வது பிறந்த தினம் 29.07.2024 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.